Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dialog டயலொக்
kit
எந்நேரமும் என்னுடன்....
100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 02 ஹிஜ்ரி 1428 ரம்ழான் 15 (19.10.2005) புதன்கிழமை இதழ்:19

# போர்நிறுத்த நிலை குறித்த அறிக்கை; நோர்வேக்கு சமர்ப்பிப்பார் ஹொவ்டே!


கொழும்பு

போர்நிறுத்த உடன்படிக்கையை கண்காணிக்கும் போது எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து நோர்வேயில் பதவியேற்றுள்ள அரசாங்கத்திற்கு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டே தீர்மானித்துள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கையைக் கண்காணிப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் போன்று ஏனைய தரப்பினர் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து இந்த அறிக்கையை சமர்ப்பிக்க அவர் தீர்மானித்துள்ளார்.

எட்டு நாட்கள் விஜயமாக கொழும்பு வந்த ட்ரொன் புறூவ் ஹொவ்டே, அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து போர் நிறுத்த உடன்படிக்கையை கண்காணிப்பது தொடர்பாக அவர்கள் சமர்ப்பித்த ஆலோசனைகள் குறித்து கலந்துரையாடி கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை சந்திப்பதற்கு முன்னர் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவை சந்தித்து கலந் துரையாடிய மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே மீண்டும் கடந்த ஞாயிற் றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஜயந்த தனபாலவை சந்தித்துக்(12 ஆம் பக்கம் பார்க்க)



## பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் களுதாவளையில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - கல்முனை வீதியிலுள்ள களுதாவளையில் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொரு பொலிஸ் கொன்ஸ்டபிள் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேற்படி இரண்டு பொலிஸ் கொன்ஸ்டபிள்களும் தமது தனிப்பட்ட கடமையின் நிமித்தம் சாதாரண உடையில் களுவாஞ்சிக்குடி பிரதேசசபைக்குச் சென்று, திரும்புவதற்காக பஸ் தரிப்பிடத்தில் நின்ற சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கொல்லப்பட்டவர் இரத்தினபுரி இறக்குவாணையைச் சேர்ந்த கமல் இந்திரஜித் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் சம்மாந்துறையைச் சேர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுவதும் அவசரகால நிலை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பு!

### ஆளும் கட்சியுடன் இணைந்து ஐ.தே.க வாக்களிப்பு

கொழும்பு

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு ஆதரவாக 80 வாக்குகளும் 19 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன. 61 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி வரை அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவாக வாக்களித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர்.

முஸ்லிம் காங்கிரஸ் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. வாக்கெடுப்பு நடத்தப்படும்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.


இதேவேளை, அவசரகாலச்சட்டம் எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதிக்குப்பின்னர் அமுலில் இருக்காது என்று (12 ஆம் பக்கம் பார்க்க)



## போர்நிறுத்த உடன்படிக்கை முற்றாக மாற்றியமைக்கப்படும்

## தேர்தல் அறிக்கை வெளியீட்டில் அனுரா - சந்திரிகா இல்லை!

கொழும்பு



# போர்நிறுத்த உடன்படிக்கை முற்றாக மாற்றியமைக்கப்படும்

## பிரதமர் மகிந்த



கொழும்பு

நோர்வேயின் அனுசரணையுடன் 2002 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்பாடு முற்றாக மாற்றியமைக்கப்படும் என்றும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகளும் மீளாய்வு செய்யப்படும் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் அறிக்கை வெளியீட்டில அனுரா - சந்திரிகா இல்லை!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜ பக்ஷ நேற்று தனது தேர்தல் அறிக் கையை வெளியிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேற்றுக்காலை 10.43 மணிக்கு தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

முதலில் சர்வமதத் தலைவர்களி டம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது. அதனையடுத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது.

தேசிய பொருளாதாரம், சமாதா னம், தர்ம ஒழுக்கங்களுடனான கலாசாரம், இளம் தலைமுறைக்கு நம்பிக் கையான எதிர்காலம் ஆகிய விடயங்கள் இந்த தேர்தல் அறிக்கையில் உள் ளடக்கப்பட்டுள்ளன.

மகிந்தவின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவோ ஜனாதிபதி (12 ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகளின் தந்தையை சுட்ட புளொட் உறுப்பினர் கைதானார்!

மட்டக்களப்பு

இரண்டு போராளிகளின் தந்தையான பொதுமகன் ஒருவரை சுட்டுப் படுகாயப்படுத்திய புளொட் உறுப்பி னர் - பொலிஸாரால் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திமிலைத்தீவைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை - நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரின் தண்ணீர் தாங்கி அருகே புளொட் உறுப் பினர் அரபாத் என்பவரால் சுடப்பட்டு படுகாயமடைந்தார். இவரது இரு பிள்ளைகள் விடுதலைப் புலிப் போராளிகளாவர்.

கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை மீதான துப்பாக்கிச்சூடு தொடர்பாக புளொட் உறுப்பினரான அரபாத் எனப்படும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# 'ஹலோ ட்ரஸ்ட்' வாகன சில்லின் கீழ் கண்ணிவெடி!

யாழ்ப்பாணம்


யாழ். மாவட்டத்தில் கண்ணிவெடி யகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் வாகனத்தரிப்பிடத்தில் வெடிக்கக்கூடிய நிலையில் வைக்கப்பட்டிருந்த வாகனக் கண்ணிவெடி ஒன்று அங்கு கடமையாற்றும் ஊழியர்களால் மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னரேயே சமாதான முயற்சிகள் தீவிரமடையும்

## எரிக் சொல்ஹெய்ம்



ஒஸ்லோ

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே தனது பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளுமென நோர்வேயில் புதிதாக நிறுவப்பட்ட வலது சாரி கூட்டணியின் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைக்கான சமாதான முயற்சிகளின் விசேட தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

அபிவிருத்தி அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் பி.பி.சியின் (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# ஊடகவியலாளர் நிமலராஜனின் 5 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு!

யாழ்ப்பாணம்

2000 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 5 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வி.தவச்செல்வம் தலைமையில் காலை 10 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் -நிமலராஜனுடைய மாமியார் திருமதி க.ஜெகதீஸ்வரி ஈகச்சுடரை ஏற்றிவைத்தார். தொடர்ந்து திருவுருவப் படத்துக்கு சிறியதந்தையார் தி.லோகநாதன் மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து ஊடகவியலாளர் நிமலராஜனின் திருவுருவப் படத்துக்கு நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன்பின் நினைவுரைகளை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் - விஜயரூபன், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் -எஸ்.சுகந்தன், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் - குணேந்திரன், வலம்புரி பத்திரிகை ஆசிரியர் - விஜயசுந்தரம், வடஇலங்கை பத்திரிகையாளர் சங்க செயலாளர் - ஆர்.தயாபரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன்- இராணுவத்தினரும், தேசவிரோத ஆயுதக் கும்பல்களும் ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்வதன்மூலம் எமது தேசியத்தை அழித்துவிடலாம் என நினைப்பது முட்டாள் தனமான விடயமாகும். இராணுவத்தினரும், அவர்களோடு இணைந்த ஆயுத கும்பல்களும் தமிழ் ஊடகவியலாளர்களை படுகொலை செய்து வருவதை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். இவ்வாறு தொடர்ந்து தமிழ் ஊடகவியலாளர்களை படுகொலை செய்வதன் மூலம் அரசாலும், இராணுவத்தாலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளை சர்வதேச உலகிற்கு வெளிக்காட்ட முடியாது என நினைப்பது அவர்களது முட்டாள் தனமாகும்.

ஒரு தமிழ் ஊடகவியலாளர் படுகொலைசெய்யப்பட்டுவிட்டார் என்பதற்காக இன்று தமிழ் ஊடகவியலாளர்கள் எவரும் மௌனமாக இருக்கவில்லை என்பதை இராணுவத்தினரும், ஆயுதக் கும்பல்களும் சரியாக புரிந்து கொள்ளவேண்டும்.

எமது தேசிய இனம் தனக்குரிய படைக்கட்டுமானத்துடன் விடியலைக் காணும் நோக்குடன் இலட்சியப் புருஷர்களின் தியாகத்துடன் சென்று கொண்டிருக்கின்ற வேளையில் - ஆட்சியாளர்களும் அவர்களோடு இணைந்தவர்களும் எமது கல்விச் சமூகத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் கல்வியாளர்கள் மீது நிழல்யுத்தம் நடத்தி வருகின்றனர். கல்வியாளர்கள் மீது நடத்தப்படுகின்ற கொலைகள் நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் மாணவர் சமுதாயத்தால் பாரிய விளைவை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என மேலும் தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளைமுதல்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி நாளை முதல் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாக கல்வித் திணைக்கள விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.பாலசிங்கம் தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக கோட்டமட் டப் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் அணிகளுக்கிடையிலான வலயமட்டப் போட்டிகள் இந்த மாத இறுதிப் பகுதியில் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் போட்டிகள் யாவும் கடந்த வாரம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (91)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 10.10.2005 அன்று கற்றல் - கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையத்தால் நடத்தப்பட்ட போட்டிக்கான பரிசளிப்பும், படி சஞ்சிகை வெளியீடும் நடைபெற்றது. படி சஞ்சிகையை பிரதம விருந்தினர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ.சதாசிவ மூர்த்தி வெளியிட்டு முதற்பிரதியை பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதனிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்

## சின்னஞ்சிறு செய்திகள்

### நல்லாசிரியர் விருதுக்கு தெரிவு

புங்குடுதீவு

2004 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நல்லாசிரியர் விருதுக்கு யாழ்.புங்குடுதீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த உப அதிபர் க.கணேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### கச்சேரியில் ஒன்று கூடவும்

யாழ்ப்பாணம்

இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர், உறவினர்கள் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின்படி நாளை மறுதினம் காலை 7 மணிக்கு கச்சேரியில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### கலாசாரப் பேரவைக் கூட்டம்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு உறுப்புரிமைக்கு விண்ணப்பித்த அனைவரையும் மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களையும், யாப்புக் குழு அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார்.

### கண்டெடுப்பு

கல்வளை, சண்டிலிப்பாயைச் சேர்ந்த தர்மலிங்கம் நகுலேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### விவசாய குழு கூட்டம்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட விவசாய குழு கூட்டம் நாளைமறுதினம் காலை 10 மணிக்கு அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.



புத்தம் புதிய DAIDO BRAND NEW
100 CC.4.GERA
0112 341580, 0112 341581

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"
வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்
ஆசிரியர்களுக்கான மாத இதழ் அகவிழி ஆசிரியத்துவ நோக்கு...
AHAVILI,3, Torrington Avenue, Colombo - 7, Sri Lanka.
T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org
(C/4683)


## கலாசாரப் பேரவைக் கூட்டம்

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலக கலாசார பேரவையின் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ஏ.சி.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் - பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலைஞர்கள், அண்மையில் நுண்கலைமாணிப் பட்டம் பெற்றவர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச கலாசார உத்தியோகத்தர் கேட்டுள்ளார்.

## உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு

யாழ்ப்பாணம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் சிறப்பு நிகழ்வுகள் நாளை பிரதேச சபை செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபையின் வளர்ச்சியில் பங்காற்றிய உத்தியோகத்தர்களில் 25 வருடங்கள் சேவையாற்றியவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டு, நினைவுப் பரிசும் வழங்கப்படவுள்ளது.

ஆவரங்கால் சிவசத்தி குழுவினர் மற்றும் சனசமூக நிலைய பாலர் பாடசாலை சிறார்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (91)

## மாம்பழம் சந்தி விபத்தில் இரு இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம்

யாழ்.கண்டி வீதியில் அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மினிபஸ் - ஓட்டோ விபத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த எஸ்.பெனீஸ் (வயது 24), கே.ரூபன் (வயது 23) ஆகியோரே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஆசிரிய கலாசாலை மாணவர்கள் இன்று முதல் உள்ளகப் பயிற்சி!

நெல்லியடி

பலாலி ஆசிரியர் கலாசாலையில் கல்வி கற்ற ஆசிரிய மாணவர்கள் இன்று முதல் அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தமது உள்ளகப் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாக இருந்தபோதும், பகிஷ்கரிப்பு போராட்டத்தால் நடைபெறவில்லை. இன்றைய தினமே பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உடற்கல்வி, கடல் நீரியல்துறை, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரிய மாணவர்களும் இதில் அடங்குவதாகவும் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி தெரிவித்தார். (12)


மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!
பார்த்தீபன், லட்சுமிராய், வடிவேல் மற்றும் பலர் நடித்த
குண்டக்க மண்டக்க...
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஸ்ரீகாந் சோனியா அகர்வால் நடித்த
ஒருநாள் ஒரு கனவு
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு மூன்றாவது ஜனத்திரள் வாரமாக
ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி, நடித்த
மழை
காட்சிகள்:-11.00,3.00,7.00, (பழையநேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
மூன்றாவது வெற்றி வாரமாக
சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
கஜினி
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
காட்சிகள்:-10.30,2.30, 6.30, மட்டும் (ப.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
சாணக்யா
காட்சிகள்:-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)


## ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்

மண்ணில் 1961 06 05



விண்ணில் 2000 10 19

### அமரர் மயில்வாகனம் நிமலராஜன்

(ஊடகவியலாளர்)

எவ்வகையில் நீ இறந்த போதிலும்
உனக்கு என்றும் அழிவென்பதே இல்லை.

வல்லமை கொண்ட
உன் உண்மைச் செய்தி
நீள் கடலோடி
நெடுமலை தாண்டி
பாருலகெங்கும்
பறையாய் முழங்கியதே.

புத்தொளி கொண்டு நீ பீனிக்ஸ் பறவையாய்
மீண்டும் மீண்டும் வானில் பறப்பாய்.

- குடும்பத்தினர் (கனடா)

(சி.4786)

# ரணிலின் கருத்துக்கு ஜே.வி.பி.கண்டனம்!

கொழும்பு—

ஜனாதிபதியாகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்டால், இராணுவத்தினரால் ஜே.வி.பிக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளதற்கு ஜே.வி.பி. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஜே.வி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அறிவிப்பின் பின்னால் பாரிய சதி உள்ளது. 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது - தான்தேர்ந்தெடுக்கப்பட்டால் சந்திரிகா குமாரதுங்கவை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பேன் என்று ரணில் கூறியதை தற்போது நினைவூட்டுவதாக உள்ளது.

ரணிலின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பின்னராக கருத்துகளை இந்தநாட்டு மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

ஜே.வி.பியினரை இராணுவத்தினரிடம் ஒப்படைப்பதாக ரணில் கூறியிருப்பதை - எமது கட்சி சாதாரணமான விடயமாகக் கருதவில்லை. ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் ஐ.தே.க. எப்படி நடந்து கொள்ளும்என்பதை வெளிப்படுத்துவதாக இது உள்ளது.

1980 களில் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காக நாட்டின் முற்போக்கு சக்திகளை எப்படி



யெல்லாம் ஐ.தே.க. ஒடுக்கியது என்பதே நல்ல உதாரணங்கள்.

இலங்கையின் அறிவார்ந்த மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய கருத்துகளை நிராகரிப்பார்கள். மக்களை ஒடுக்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தனது உண்மை முகத்தை தற்போது மறைத்துக்கொண்டுள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அதிகரிக்கும் தேர்தல் வன்முறைகள்! 50 பேர் இதுவரை கைதாகினர்!

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகள் 90 ஆக உயர்ந்துள்ளதாகவும், தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டதாக 50 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் கொழும்பு பிரதேசத்திலேயே கைது செய்யப்பட்டதாக, தேர்தல் செயலகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களும், பல முக்கிய குற்றவாளிகளும் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடத் தயாராவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் - இவர்கள் ஏற்கனவே நாட்டின் பல இடங்களுக்குச் சென்று வாடகைக்கு வீடுகளை எடுத்துத் தங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாத்தளையில் தேடுதல்; 24 இளைஞர்கள் கைது!

கொழும்பு—

மாத்தளை மகாவெல கவுடுபெலல்ல பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் வவுனியாவைச் சேர்ந்த நால்வர் உட்பட 24 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கவுடுபெலல்ல தோட்ட வீடமைப்புத் தொகுதியில் இந்தத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சந்தேக நபர்களிடமிருந்து டொல்பின் ரக வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

அத்துடன், இந்தத் தேடுதலின் போது 2002 ஆம் ஆண்டின் முக்கிய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# சுகாதார ஊழியர்கள் இன்று அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு—

சுகாதாரத்துறை ஊழியர்கள் இன்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

முன்னைய நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த ஊதிய உயர்வான ரூபா.2500 இல் 50 வீதத்தைக் குறைக்க சுகாதாரத்துறை அமைச்சு மேற்கொண்டுள்ள முடிவை எதிர்த்து இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சுகாதாரத்துறை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் ரவி குமுதேஸ் இதை அறிவித்தார்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திலிருந்து றைட்வே குழந்தைகள் வைத்தியசாலை, டி சொய்சா மருத்துவமனை, கார்சல் வீதி மகப்பேற்று மருத்துவமனை, மகரகம புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றின் ஊழியர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரை இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டாலும், அனைத்து மருத்துவமனைகளிலும் அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

# தமிழ்மக்கள் அரசியல்பலம் மிக்கவராக மாறுவதை விரும்பாத சக்திகள் சதிமுயற்சியில் ஈடுபடுகின்றன!

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தால் உருவான யுத்த நிறுத்தம், தமிழ் பேசும் மக்களை அரசியல் பலம் பெற்றவர்களாக மாற்றும் நிலையை நாட்டில் இன்னும் ஏற்படுத்தவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலமாக மாறுவதை விரும்பாத சக்திகள் சதி முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன என - தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நாள் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம், தமிழ் பேசும் மக்களை அரசியல் பலம் பெற்றவர்களாக மாற்றவேண்டும். இவ்வாறு மாற்றப்படுவதை உடைப்பதற்காகத்தான் அரசாங்கமும், அதன் ஆயுதப் படையினரும், துணைப்படையினரின் உதவியுடன் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

திருகோணமலையை இழப்பதற்கு எவரும் தயாரில்லை, திருகோணமலையில் உரித்துள்ளவர்களும் தயாரில்லை, உரித்தில்லாதவர்களும் தயாரில்லை. தமிழீழம் உருவாகாது என்று சொல்ல முடியாது. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் போதிய சுயாட்சி அதிகாரங்கள் கொண்டதான மாநிலமாக அமையவேண்டுமென்பதே தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்பாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களைப் போன்றதல்ல திருகோணமலை மாவட்டம். அது தனித்துவமானது. எனவே, திருகோணமலையில் நடைபெறப்போகும் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வு தமிழ் பேசும் மக்களின் கணிசமான ஆதரவைப் பெற்றதாக அமைய வேண்டும்.

திருகோணமலையில் தமிழ்த் தேசிய எழுச்சி நாள் நிகழ்வை நடத்துவதற்கு முட்டுக்கட்டை இருக்காது என்று சொல்லவில்லை. நாம் எவருக்கும் மாறாக எழுச்சி நாள் நிகழ்வை நடத்தவில்லை. எங்கள் உரிமைகளை வலியுறுத்தவே இந்த நிகழ்வை நடத்துகின்றோம். யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்து மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. தமிழ்பேசும் மக்களின் அரசியல் நிலவரத்தில் அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதில் தற்காலிகமாக மாற்றம் எதுவும் ஏற்



படவில்லை. இந்த நிலை இனியும் தொடரமுடியாது என்பதை வலியுறுத்துவதே எழுச்சி நாள் நிகழ்வின் நோக்கம்.

யுத்தம் - சமாதானத்துக்குத் தடையானது. சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே யுத்தநிறுத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால், யுத்தநிறுத்த ஒப்பந்தம் வந்த பின்பு தமிழ்மக்கள் ஒன்றையும் அடையவில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மற்றும் சுனாமி நிவாரணப் பொதுக் கட்டமைப்பு என ஒன்றுமே கிடைக்கவில்லை.

தமிழ்பேசும் மக்கள் ஜனநாயக வழியில் தேர்தலில் தங்கள் நிலைப்பாட்டை ஆட்சியிலிருப்பவர்களுக்கு வலியுறுத்தி வந்தனர். பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் எல்லாம் கைச்சாத்தாகின. ஒன்றுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக செயற்பாடுகளுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த பதில் வன்முறைதான்.

தற்போதைய நிலைமையை தொடரவிடமுடியாது. தமிழ் பேசும் மக்களுக்கு உரிய கௌரவம் கிடைக்கவேண்டும். அவ்வாறான கௌரவம் திருமலையை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். நாம் அடிமைகள் அல்லர். உரிமைகளையே கேட்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

# 1988 - 2000 ஆண்டு காலப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 16 ஆயிரத்து 429 பேர் பலி!

கொழும்பு—

துப்பாக்கிச்சூடு காரணமாக 1988 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் சுமார் 16 ஆயிரத்து 429 பேர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதபாவனையால் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்தான அறிக்கை ஒன்றில் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டில் மாத்திரம் 4 ஆயிரத்து 740 பேர் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களில் பலியாகினர்.

1988 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 473 பேர் துப்பாக்கித் தாக்குதலுக்குப் பலியாகினர்.

இந்த நிலையில் 10 ஆயிரத்து 785 பேர் சாதாரண துப்பாக்கித் தாக்குதல்களாலும், 2 ஆயிரத்து 635 பேர் கைத்துப்பாக்கிகளாலும் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் தாயகக் கோட்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கிறதா?

## தாம்பர அமில தேரர்

கொழும்பு—

தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்தாயகக் கோட்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக் கொள்கிறதா என்பது குறித்து விளக்கம் அளிக்கவேண்டும் என்று - தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தாம்பர அமில தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தாம்பர அமில தேரர் எழுதியுள்ள கடிதத்தில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தங்களை மீறி வருகின்றனர். லக்ஷ்மன் கதிர்காமர் கொலை, புலனாய்வுத்துறை அதிகாரிகள், உளவாளிகள் உள்ளிட்ட பலரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி இந்தப் படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவித்திருந்த ஐ.தே.க. இந்தக் கொலைகளை விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்று கூறவில்லை.

ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்று ஐ.தே.க. கூறிவருகிறது. ஒஸ்லோ பிரகடனமானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித் தாயகக் கோட்பாடு மற்றும் பிரிவினையை ஆதரிக்கிறது.

அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தனித்தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்கிறதா என்று அந்தக் கடிதத்தில் அமில தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு விசேட கொமாண்டோ பயிற்சி!

கொழும்பு—

சிறைச்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு விசேட கொமாண்டோ பயிற்சி அளிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக, நீதித்துறை அமைச்சர் ஜோன் செனிவிரட்ன அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

சிறைச்சாலைகளிலிருந்து குற்றவாளிகளை விளக்கமறியல் நீடிப்புக்காக நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும்போது நடத்தப்படும் தாக்குதல்களை எதிர்கொள்வதற்காகவே இந்தக் கொமாண்டோப் பயிற்சி அளிக்கப்படும்.

அஸ்கிரிய, கம்பஹா உள்ளிட்ட பகுதிகளில் சிறைகளிலிருந்து கைதிகள் அழைத்துச் செல்லப்பட்டபோது, தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய அரசு முடிவு செய்தது.

இனிவரும் நாட்களில் சிறைச்சாலை வாகனங்கள் நீதிமன்றத்துக்குச் செல்லும்போது - அதற்குப் பாதுகாப்பாகக் கொமாண்டோ பயிற்சிபெற்ற படையினரும் உடன் செல்வர்.

இந்தக் கொமாண்டோ பயிற்சியில் உயர்கல்வி பெற்ற இளைஞர்களும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். நாட்டின் சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், அதிகாரிகளும் நவீன வசதிகளைக் கொண்ட ஆயுதங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆனால், குற்றவாளிக் குழுக்கள் இந்த ஆயுதங்களைக் கையாள்கின்றன எனத் தெரிவித்தார்.

# மரபணுப் பரிசோதனை புதிய சட்ட திருத்தம்!

கொழும்பு—


நீதிமன்றத்தில் சந்தேக நபராக நிறுத்தப்படும் ஒருவரிடம் மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிடும் அதிகாரத்தை நீதிவான் நீதிமன்றத்துக்கு வழங்கும் முகமாக சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சொலிஸிட்டர்ஜெனரல் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் சந்தேக நபரின் விருப்பத்தின் பேரில் மாத்திரமே மரபணுப் பரிசோதனையை மேற்கொள்ளும் நிலைமை இருந்தது.

இது நடைமுறையில் குற்றங்கள் தொடர்பில் பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையிலேயே - இந்தப் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# இந்திய அணியின் சிறந்த கப்டனாக ராவிட் திகழ்வாரென்கிறார் அக்தர்!



சிட்னி —

இந்திய அணியில் சிறந்த கப்டனாக ராவிட் திகழ்வாரென பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் நிருபர்களுக்கு பேட்டியளித்த அக்தர் - இந்திய அணியின் புதிய கப்டன் ராவிட் குறித்து கூறியதாவது -


ராவிட்டுடன் நான் விளையாடியதை வைத்துச் சொல்கிறேன். அவரை இந்திய அணிக்கு கப்டனாகத் தெரிவு செய்தது சிறப்பான ஒன்றாகும். அவர் ஒரு சிறந்த கப்டனாக உருவெடுப்பார். இந்திய அணியில் நல்ல ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

கங்கூலிக்கு சிறிது காலம் ஓய்வு தேவை என்றே நான் கருதுகிறேன். இந்த ஓய்வின் மூலம் அவர் மீண்டும் திறமையை மேம்படுத்திக் கொள்ள முடியும். இது அவருக்கும் நல்லது, அணிக்கும் நல்லது.

கங்கூலிக்கும் - கிரேக் சப்பலுக்கு மிடையே என்ன நடந்தது என்பதில் நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை.

ஆனால், இது போன்ற பிரச்சினைகள் ஏற்படுவது நல்லதல்ல. இதனால் அணிக்கு பெரிய பாதிப்பு ஏற்படும். இந்திய அணியுடன் விளையாடுவதற்கு நான் ஆர்வமாக இருக்கிறேன்.

காயத்தினால் ஓய்வில் இருந்த நான் இப்பொழுது முழுத் தகுதியுடன் இருக்கிறேன். இனிவரும் போட்டிகளில் எனது திறமையை நிரூபிப்பேன். அடுத்து பாகிஸ்தான் அணி பங்கேற்கும் 2 சுற்றுப்பயணங்களிலும் நான் இடம்பெறுவேன். அவுஸ்ரேலிய சுப்பர் சீரிஸ் போட்டியில் விளையாடியதன் மூலம் நல்ல அனுபவத்தைப் பெற்றுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



# இலங்கை - இந்திய தொடருக்கான நடுவர்களின் விபரம் அறிவிப்பு!

மும்பை —

இந்திய அணியுடன் இலங்கை அணி மோதவுள்ள ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான நடுவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணி இந்த மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. பின்னர் தாயகம் திரும்பும் இந்த அணி - டிசம்பரில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த அலன் ஹர்ஸ்ட் ஒருநாள், மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த கிளைவ் லொயிட் டெஸ்ட் தொடருக்கான போட்டி நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பில்லி போடன் (நியூஸிலாந்து), மார்க் பென்ஸன் (இங்கிலாந்து), இருவரும் ஒருநாள் தொடருக்கான ஐ.சி.சி. நடுவர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்தியாவின் சார்பில் ஹரிகரன், சிவராம், ஜெயபிரகாஷ் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றவுள்ளனர்.

ஒருநாள் தொடருக்கான நடுவர்கள் வருமாறு :
ஒக்ரோபர் 25 1 ஆவது போட்டி - நாக்பூர் - பில்லி போடன், ஹரிகரன்
ஒக்ரோபர் 28 2 ஆவது போட்டி - மொகாலி -பில்லி போடன், ஜெயபிரகாஷ்
ஒக்ரோபர் 31 3 ஆவது போட்டி -ஜெய்ப்பூர் -பில்லி போடன், ஹரிகரன்
நவம்பர் 3 4 ஆவது போட்டி -புனே - பில்லி போடன், ஜெயப்பிரகாஷ்
நவம்பர் 6 5 ஆவது போட்டி -அஹமதாபாத்- மார்க் பென்ஸன், ஹரிகரன்
நவம்பர் 9 6 ஆவது போட்டி -ராஜ்கோட் -மார்க்பென்ஸன், ஜெயபிரகாஷ்
நவம்பர் 12 7 ஆவது போட்டி - வடோதரா -மார்க்பென்ஸன், ஹரிகரன்

# சீனா, கனடா மரதன் போட்டிகளில் இரண்டு வீரர்கள் உயிரிழந்தனர்!



பீஜிங் —

சீனா மற்றும் கனடாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நீண்டதூர மரதன் போட்டியில் பங்கேற்ற வீரர்களில் இருவர் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

சீனாவில் உள்ள பீஜிங் நகரில் ஆண்டு தோறும் மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதுபோல நேற்றுமுன்தினம் இந்த ஆண்டுக்கான மரதன் போட்டி நடைபெற்றது. இது 27 கிலோ மீற்றர் தூரம் (17 மைல்) ஓடவேண்டிய மரதன் போட்டியாகும்.

இதில் ஆயிரக்கணக்கான வீரர்கள் கலந்துகொண்டனர். பல்வேறு நாட்டைச் சேர்ந்த ஓட்டப் போட்டி வீரர்கள் இதில் பங்கேற்றிருந்தார்கள். அப்போது சீன வீரர் ஒருவர் மயக்கமடைந்து நடு வீதியிலேயே சுருண்டு விழுந்து, சுயநினைவை இழந்தார். இது பற்றி வைத்தியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், அவர் பரிதாபமாக இறந்து போனார். அவருடைய புனை பெயர் வாங் என்று தெரியவந்துள்ளது. சீனாவைச் சேர்ந்தவர் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், உண்மையான பெயர் மற்றும் விலாசம் உடனடியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கென்ய வீரர் பென்சன் செரோனா முதல் பரிசைத் தட்டிச் சென்றார். பெண்கள் பிரிவில் சீன வீராங்கனை சுன்யிங் ஜி முதல் பரிசைப் பெற்றார். கடந்த ஆண்டும் இவர்தான் வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2004ஆம் ஆண்டு நடந்த மரதன் ஓட்டப் போட்டியின்போது இறந்தவர்களில் ஒருவர் பல்கலைக் கழக மாணவர், இன்னொருவர் ஓய்வு பெற்ற அதிகாரி. அப்போது மொத்தம் 11 பேர் மயக்கமுற்று மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதேபோன்று கனடா நாட்டில் உள்ள ரொரன்டோ நகரிலும் நேற்று முன்தினம் மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு ஓடிய ஒரு வீரர் போட்டித் தூரத்தை ஓடி முடித்தபோது, சுருண்டு மயங்கி விழுந்தார்.

அவரை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். ஆனாலும் சிகிச்சை பயனின்றி அந்த வீரரும் உயிரிழந்தார்.

# விளையாட்டு

## 20 ஓவர்கள் கிரிக்கெட் போட்டி

# லிங்கன் கல்விக்கழக அணியை லைவன்ஸ்ரார் அணி வென்றது!

புத்தூர் —

புத்தூர் எவரெஸ்ற் விளையாட்டுக் கழகம் தீபாவளி தினத்தை முன்னிட்டு உள்ளூர் கழகங்களுக்கிடையில் நடத்திய 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் லைவன்ஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

எவரெஸ்ற் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற இறுதியாட்டத்தில் லிங்கன் கல்விக்கழக அணியை எதிர்த்து லைவன்ஸ்ரார் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லிங்கன் கல்விக்கழக அணித் தலைவர் தமது அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார். அதற்கமைய துடுப்பெடுத்தாடிய லிங்கன் அணி 14.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது.


இதில் சஜீவன் 35, ராகுலன் 20, நிஷாந்தன் 14, கௌஷிகன் 10 ஓட்டங்ளைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் றஜிந்திரன் 5, பிரஷாந்தன் 4, காண்டீபன் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

78 ஓட்டங்களென நிர்ணயிக்கப்பட்ட வெற்றி இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய லைவன்ஸ்ரார் அணி 16.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது.

இதில் கஜீவன் 20, பிரஷாந்தன் 17, கஜரூபன் 10, றஜிந்திரன் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நிஷாந்தன் 3, முரளி 3, குபேரன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



## வீரர்கள் ஆட்டமிழக்கும் பிரச்சினை

# வீடியோ நுட்பத்தை புகுத்த ஐ.சி.சி அவசரம் காட்டாதாம்

சிட்னி —

கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் போது மைதானத்துக்குள் 2 நடுவர்களும் மைதானத்துக்கு வெளியே ஒரு நடுவரும் இருந்து முடிவுகளை எடுக்கிறார்கள். ஆனாலும், வீரர்கள் ஆட்டமிழக்கும் போது இவர்கள் எடுக்கும் முடிவு சில சமயம் சர்ச்சையை ஏற்படுத்துகிறது.

எனவே, வீடியோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 3 ஆவது நடுவர் மூலம் முடிவுகளை எடுப்பது குறித்து அவுஸ்ரேலியாவில் நடந்த சுப்பர் சீரிஸ் டெஸ்ட் போட்டியில் பரீட்சார்த்தமாக சோதனை செய்து பார்க்கப்பட்டது.

இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட் கூறியதாவது-

2002 இலங்கையில் நடந்த சம்பியன் கிண்ண போட்டியிலும், இதேபோல் பரிசோதித்துப் பார்க்கப் பட்டது. இருந்தாலும் நாங்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.

வீடியோ தொழில்நுட்பம் மற்றும் புதிய தொழில் நுட்பங்களை புகுத்தும் போது, மிகவும் எச்சரிக்கையாக இருக்க விரும்புகிறோம். இதில் அவசரமாக எந்த முடிவையும் எடுக்கமாட்டோம்.

இதன் செயற்பாடுகள் பற்றி முழுமையாக ஆராய்ந்து நீண்ட விவாதத்துக்குப் பின் முக்கிய முடிவுகளை மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

# இந்திய கிரிக்கெட் வீரர்களுடன் ஒப்பந்தம் செய்வதில் சிக்கல்!

கொல்கத்தா —

இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடும் ஒவ்வொரு வீரர்களும் இந்திய கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். இது ஒரு ஆண்டு காலத்துக்கு மட்டுமே செய்யப்படுகிறது.

தற்போது ஒப்பந்த காலம் முடிவடைகிறது. எனவே, இலங்கைக்கு எதிரான போட்டி தொடங்கும் முன்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவேண்டும். எனவே, இன்று பெங்களூரில் தொடங்கும் பயிற்சியின்போது வீரர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள கிரிக்கெட் சபை திட்டமிட்டிருந்தது.

ஆனால், கப்டன் ராவிட், முன்னணி வீரர்கள் கங்கூலி, கும்ளே, லக்ஷ்மன், கைவ், நெஹ்றா ஆகியோர் பயிற்சி முகாமில் பங்கேற்காததால், ஒப்பந்தம் ஏற்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஒப்பந்தம் ஏற்படுத்தும் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்திய - இலங்கை போட்டி நடந்து கொண்டிருக்கும்போது ஏதாவது ஒரு நாளில் ஒப்பந்தத்தை ஏற்படுத்தலாம் என்று திட்டமிட்டுள்ளனர். ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது வீரர்கள் தரப்பில் இருந்து பல்வேறு கோரிக்கைகள் வரலாம். அதை ஆராய்ந்துதான் ஒப்பந்தம் ஏற்படுத்த முடியும்.

எனவே, இது சம்பந்தமாக கிரிக்கெட் ஒப்பந்த குழு, கப்டன் ராவிட், கிரிக்கெட் சபை செயலாளர் ரத்னாகர் ஷெட்டி, இணைச் செயலாளர் கௌதம் தேஷ் குப்தா ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளது. பேச்சின்போது- உரிய முடிவு ஏற்படாவிட்டால், ஒப்பந்தம் செய்வதில் தாமதமாகலாம். ராவிட்டுக்கு இப்போது கப்டன் பொறுப்புடன் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் பொறுப்பும் சேர்ந்துள்ளது.

வீரர்களுடன் உடனடியாக ஒப்பந்தம் ஏற்படுத்தாவிட்டாலும், இலங்கை அணியுடனான போட்டியில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

# அஸ்ரா கிண்ண கிரிக்கெட்; யூனியன் கல்லூரி வெற்றி!

யாழ்ப்பாணம் —

பாடசாலைகளுக்கிடையிலான அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டியின் 13 வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரிக்கும், ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையிலான போட்டி கடந்த 5ஆம் திகதி - ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யூனியன் கல்லூரி அணி முதலில் ஹாட்லிக் கல்லூரி அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி முதல் இனிங்ஸில் ஹாட்லிக் கல்லூரி 137 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ரி.நிஷாந்தன் 30, என்.விஷ்ணுகாந் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யூனியன் கல்லூரி சார்பாக கஜாகரன் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், வி.பிருத்துவிகன், ஆர்.பிரசாந், கே.நிவாசன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 142 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்தபோது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் அணித் தலைவர் கே.ராகுலன் 67, என்.கோகுலநாத் 10, வி.பிருத்துவிகன் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

இரண்டாவது இனிங்ஸில் ஹாட்லிக் கல்லூரி 45 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்தபோது ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இதில் கே.நிவாசன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மேற்படி போட்டியில் யூனியன் கல்லூரி அணி புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

# உதைபந்தாட்ட நடுவருக்கு ஆயுட்கால தடை விதிப்பு!

றியோடிஜெனிரோ —

கிரிக்கெட் விளையாட்டை வைத்து சூதாட்டம் நடப்பது போல உதைபந்தாட்டத்தில் சூதாட்டம் நடக்கிறது.

பிரேசில் நாட்டில் சூதாட்டத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாக அந்த நாட்டு உதைபந்தாட்ட நடுவர் எடில்சன் பெரரா கைது செய்யப்பட்டார்.

உள்நாட்டில் நடந்த சில போட்டிகளில் அவர் ஆட்ட சதி மோசடி செய்திருந்தார். அவரது முறைகேடு குறித்து விசாரிக்க 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அவர்கள், எடில்சன் முறைகேடு செய்ததை உறுதி செய்தனர்.

இதனால் அவர் உதைபந் தாட்ட நடுவராக இருக்க ஆயுட்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்




சரியான விடையைத் தெரிவு செய்க.

01) விசையின் சர்வதேச அலகு யாது?
1. N 2. Nm 3 .$Ms^{-1}$ 4. J

02) காவிக்கணியங்களை மட்டும் கொண்ட விடைத்தொகுதி பின்வருவனவற்றுள் எது?
1. விசை, நிறை, வேகம் 2. திணிவு, கதி, ஆர்முடுகல்
3. கதி, வேகம், ஆர்முடுகல் 4. நேரம், பரப்பு, கனவளவு

03) பின்வரும் வித்துக்கள் பரம்பலடையும் முறை யாது?



1. காற்று மூலம் 2. நீர் மூலம்
3. விலங்குகள் மூலம் 4. வெடித்தற் பொறிமுறை

04) பூக்கும் தாவரங்களின் இலிங்க அங்கம் பின்வருவனவற்றுள் எது?
1. பூ 2. இலை 3. அரும்பு 4. வேர்

05) வித்து முளைத்தலுக்கு அவசியமற்ற காரணி பின்வருவனவற்றுள் எது?
1. சூரிய வெப்பம் 2. சூரிய ஒளி
3. மழைநீர் 4. ஒட்சிசன்

06) பின்வரும் நெம்புகோல்களின் வகையை சரியாகக் குறிக்கும் வகை?



1. 1ம் வகை, 2ம் வகை, 3ம்வகை, 1ம்வகை
2. 1ம் வகை, 2ம் வகை, 2ம் வகை, 3ம் வகை
3. 2ம் வகை, 2ம் வகை, 1ம் வகை , 3ம் வகை
4. 3ம் வகை, 1ம்வகை, 2ம் வகை, 1ம் வகை

07) இலத்திரனியற் சுற்றுகளில் காணத்தக்க துணைக்கருவி ஒன்று உருவிலே காட்டப்பட்டுள்ளது. அது



1. நுணுக்குப் பன்னி
2. ஒளிபெருக்கி
3. மாறும் கொள்ளளவி
4. செவிப் பன்னி

08) 'கல முகாமையாளர்' (Cell Manager) எனக் குறிப்பிடப்படும் கலப்புன்னங்கள் முறையே
1. கரு, இழைமணி 2. இழைமணி, கரு
3. பச்சய உருமணி, கரு 4. கரு, பச்சய உருமணி

09) இரும்பானது கொதிநீராவியுடன் நிகழ்த்தும் தாக்கம் பின்வருமாறு.

$$XFe + YH_2O \rightleftarrows Fe_3O_4 + ZH_2$$

(கொதி நீராவி)

மேலே x,y,z ஆகியவற்றின் பெறுமானங்கள் முறையே.
1. 2,3,3 2. 3,4,4 3. 2,3,4 4. 4,3,3

10) M எனும் ஓர் உலோக சல்பைட் பின்வரும் செயன்முறை மூலம் பிரித்தெடுக்கப்படுகின்றது.

$$MS + O_2 \xrightarrow[\text{வறுத்தல்}]{\text{வளியில்}} MO + SO_2$$

$$MO + C \xrightarrow[\text{தாழ்த்தல்}]{\text{காபனுடன்}} M + CO$$


இங்கு M ஆக இருக்கக் கூடியது.
1. Na 2. Zn 3. Fe 4.Ag

11) $NaOH + HCI \longrightarrow NaCI + H_2O$ எனும் தாக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது.

(Na = 23, H=1,CI=35.5, O=16)

1. NaOH அமில இயல்புடையது
2. HCI கார இயல்புடையது
3. இது ஒரு நிலையாக்கற் தாக்கம் என அழைக்கப்படலாம்.
4. 20g NaOH முற்றாக HCI உடன் தாக்கமடைந்து 18g $H_2O$ ஐ உருவாக்கும்.

12) $Ca + H_2SO_4 \rightarrow CaSO_4 = H_2$ எனும் தாக்கத்தின் விளைவாகிய $H_2$ வாயு உருவாகும் வீதம் அருகில் வரைபிலுள்ளது எனின் தாக்கியாகிய $H_2SO_4$ நேரத்துடன் மாறும் வீதம் பின்வருவனவற்றுள் எது?





13) சில நுணுக்குப் பன்னிகள் கீழேயுள்ளன. இவற்றில் மின்காந்த தொழிற்பாடு பயன்படுத்துவது எது? எவற்றில் ஆகும்?

a. பளிங்கு நுணுக்குபன்னி b.ஒடுக்கி நுணுக்குப்பன்னி
c. இயங்கு சுருள் நுணுக்குப்பன்னி d. நாடா நுணுக்குப்பன்னி
1. a,b,c 2. a,b,d 3. d,c,b 4. c,d

14) தற்கால மின்சுற்றுக்களில் உருகிகளுக்கு பதிலாக பயன்படுத்தப்படுவது.
1. நுண்சுற்றுடைப்பான் 2. கொள்ளளவிகள்
3. ஆளி 4. தடக்காளிகள்

15) ஓய்விலிருந்து புறப்படும் வாகனம் ஒன்று $4ms^{-2}$ எனும் சீரான ஆர்முடுகலுடன் இயங்குகின்றது. வாகன இயக்கம் வரைபில் காட்டப்பட்டுள்ளது. $t_1$, $t_2$, $t_3$ சமனான நேர ஆயிடை எனின் வாகனம் இயங்கிய மொத்த நேரம் யாது? (வாகனம் இயங்கிய மொத்தத் தூரம் 0.8 முஅ)




1. 10 S 2. 20 S 3. 30 S 4. 60 S

16) இறப்பர் மரம் ஒன்றில் அதிக இறப்பர் பால் காணப்படும் பிரதேசம் யாது?
1. காழ் 2. மேற்பட்டை 3. மென்மரவுரி 4. வன்மரவுரி


17) $C_xH_y$ எனும் ஐதரோகாபன் வளியில் முற்றாகத் தாக்கமடைந்து 3 மூலக்கூறு காபனீரொட்சைட்டையும் 4 மூலக்கூறு நீரையும் உருவாக்கியது. X,Y இற்கு இருக்கக் கூடிய பெறுமானங்கள் பின்வருவனவற்றுள் எது?
1. $C_2H_6$ 2. $CH_4$ 3. $C_3H_8$ 4. $C_4H_{10}$

18) இறப்பர் மரத்தின் தாவரவியல் பெயராக அமைவது பின்வருவனவற்றுள் எது?
1. Hevea brasiliensis 2. Hevica brasilliansis
3. Heveca Brasilliansis 4. Heveca Brasilliansis

19) பின்வரும் எவ்வுலோகம் பித்தளை வெண்கலம் இரண்டிலும் காணப்படும்.
1. செப்பு (Cu) 2. வெள்ளீயம் (Sn)
3. இரும்பு (Fe) 4. மக்னீசியம் (Mg)

20) தாவரங்கள் பதியமுறை இனப்பெருக்கத்துக்குப் பயன்படுத்தாத அமைப்பு எது?
1. இலை 2. தண்டு 3. வேர் 4. பூ

21) அருகிலுள்ள மின்குமிழ்கள் சமதடையுடையன. இம் மின்சுற்றில் பிரகாசம் கூடிய, பிரகாசம் குறைந்த மின்குமிழ்கள் முறையே
1. A,F 2. A,B
3. E,A 4. C.D




22 ஆம் வினா பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. இங்கு மூலகங்கள் நியமக் குறியீடுகள் அல்ல.

| மூலகம் | இலத்திரன் | நியூத்திரன் |
|---|---|---|
| A | 7 | 7 |
| B | 18 | 22 |
| C | 6 | 6 |
| D | 20 | 20 |

22) மூலகம் A இன் அனுவெண் திணிவெண் என்பவற்றை சரியாக குறிப்பன.
1. ${}^{7}_{7}A$ 2. ${}^{14}_{7}A$ 3. ${}^{7}_{14}A$ 4. ${}^{14}_{14}A$

23) அலுமினியத்தை விட செப்பு மின்னை நன்றாகக் கடத்தக்கூடியதாக இருப்பினும் வீதிகளில் மின்வடங்களில் அலுமினியமே பயன்படுகிறது. இதற்கு பிரதான காரணம்
1. அலுமினியம் விலை குறைந்தது.
2. அலுமினியம் அடர்த்தி குறைந்தது.
3. செப்பு இலகுவில் பெறமுடியாமை
4. வீட்டு மின் வடங்களில் செப்பு பயன்படுத்தப்படுகின்றமை.

24) பின்வரும் திரட்சி நிரோதிகளில் பக்றீரியாக்களை முழுமையாக அழிப்பது எது, எவை?
a. சோடியம் காபனேற்று b. சோடியம் சல்பேற்று
c. போமலடிகைட் d. அமோனியம் கரைசல்
1. a,c 2. b,d 3.a 4. c

25) 100W, 230V என குறிக்கப்பட்ட மின்குமிழ் 20% ஒளிச்சக்தியாக வெளியேற்றின் 5 மணித்தியாலத்தில் இது வெளியேற்றிய ஒளிச்சக்தி Kwh ல் யாது?
1. $100 \times 230 \times \frac{20}{100}$ 2. $100 \times \frac{20 \times 5}{100} \times \frac{1}{100}$ 3. $\frac{20 \times 230}{100} \times \frac{1}{5}$ 4. $1000 \times \frac{20}{100} \times \frac{5}{100}$

X எனும் மூலக ஒட்சைட்டின் சூத்திரம் $X_2O_3$ ஆகும் இதனை அடிப்படையாக வைத்து 26,27,28 ஆகிய வினாக்களுக்கு விடை தருக

26) X ன் வலுவளவு பின்வருவனவற்றுள் எது?
1. 3 2. 2 3. 1 4. 4

27) X இன் பொஸ்பேற்றின் சூத்திரம் பின்வருவனவற்றுள் எது?
1. $XPO_4$ 2. $X_3PO_4$ 3. $X_3PO_3$ 4. $X(PO_4)_3$

28) X ஆக இருக்கக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
1. Na 2. Mg 3. Al 4. Ca

29) பின்வரும் தசை இழையங்களில் வரிகொண்ட தசைகள் எது, எவை?
a. மழமழப்பு தசை b. இதயதசை c. வன்கூட்டுத்தசை
1.a,c 2. a மட்டும் 3. b,c 4. a,b

ஆசிரியர்:- சி.சிவதாஸன்
ODW வளநிலையம் கோப்பாய்.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்


## கணிதம் பகுதி - I

01. ஒவ்வொன்றும் ரூபா 45/- பெறுமதியான 2 தேயிலைப் பக்கெட்டுகளும், ஒவ்வொன்றும் ரூ.112.00 பெறுமதியான 3 லக்ஸ்பிறே பக்கெட்டுகளும் 1kg ரூ.36.00 வீதம் 5kg சீனியும் வாங்கிய நான், 1000 ரூபாத்தாள் ஒன்றைக் கடைக்காரரிடம் கொடுத்தேன். நான் பெறும் மிகுதிப் பணம் எவ்வளவு?

02. சுருக்குக $3\sqrt{45}+\sqrt{20}+2\sqrt{5}$

03. $\log 4 + 2\log 5$ இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணை உபயோகிக்காமல் காண்க.

04. படத்தில் $A\cap(B\cup C)$ இற்குரிய பிரதேசத்தை நிழற்றிக் காட்டுக.




05. (64)2/3 இன் பெறுமானம் காண்க.


06. சுருக்கி எளிய வடிவில் எழுதுக. $\frac{9a^2}{(a+1)} \times \frac{(a^2+a)}{3a}$

07. $4^3 - 1000a^3$ இன் காரணிகளை எழுதுக.

08. வாடகைக் கொள்வனவு முறையில் விற்கப்படும் ரூபா 27000 பெறுமதியுடைய தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றுக்கு ரூபா 900 மாதத் தவணைக் கட்டணமாக 36 மாதங்களுக்குச் செலுத்தி வாங்க முடியும். அறவிடப்படும் மொத்த வட்டி எவ்வளவு?

09. C/5 = F-32/9 எனும் சூத்திரத்தின் F ஐ எழுவாயாக மாற்றுக.

10. உருவில் காட்டப்பட்டுள்ள ஐங்கோணி ABCDE இல் AB//EC ஆகும். உருவில் சமபரப்புடைய இரு முக்கோணிகளின் பெயர்களை எழுதுக.




11. காரணி முறை மூலம் பெறுமானம் காண்க. $(103)^3$

12. ஐரோப்பிய நாணயமான ஒரு யூரோவின் இலங்கைப் பெறுமதி ரூபா 67.40 ஆகும். ஐரோப்பாவிலிருக்கும் ஒருவர் இலங்கைக்கு அனுப்பிய உடுப்புப் பொதி ஒன்றின் பெறுமதி 170 யூரோ ஆயின், அவ் உடுப்புக்களின் இலங்கைப் பெறுமதி எவ்வளவு ரூபா?

13. சுருக்கி விடை தருக. $\frac{3}{X-2} - \frac{1}{X2-4}$

14. மாணவன் ஒருவன் 7 பாடங்களில் பெற்ற புள்ளிகள் வருமாறு. 82, 56, 93, 68, 64, 72, 60 இப்புள்ளிகளின் இடையம் யாது?


15. X=9, Y=16 ஆக இருப்பின $2\sqrt{XY}-X$ இன் பெறுமானம் யாது?

16. இவ்வொருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்காமல் 1/X+1/Y இன் பெறுமானத்தைக் காண்க.

5/X+ 1/Y = 30..................(1)
3/X - 1/Y= 18..................(2)

17. A=(5,12) B=(2,0) எனும் இரு புள்ளிகளுக்கூடாகச் செல்லும் நேர்கோட்டின் படித்திறன் யாது?


18. தரப்பட்டுள்ள வட்டத்திலே AB=12cm, CD=16cm நீளமுள்ள இரு நாண்களாகும். நாண் AB மையத்திலிருந்து 8cm தூரத்திலிருப்பின் நாண் CD எவ்வளவு தூரத்திலிருக்கும்.




19. வசந்தியும், வனிதாவும் 200M ஓட்டப் போட்டியில் ஓடி முடித்தநேரங்கள் 10:11 என்ற விகிதத்தில் இருந்தன. வனிதாவை விட வசந்தி 3 செக்கன் முந்தி ஓடி முடித்து முதலாவதாக வந்தாள் எனின், வசந்தி ஓடிய நேரம் எத்தனை செக்கன்?

20. ஒரு பெட்டியில் இருக்கும் 10 மாம்பழங்களில் 3 பழுக்காதவை, 5 நன்கு பழுத்தவை. ஏனையவை அழுகியவை. பெட்டியிலிருந்து ஒன்றை எடுத்துப் பின் மீண்டும் பெட்டியில் இடாமல் இன்னொன்று வெளியே எடுக்கப்பட்டது. எடுத்த இரண்டு அழுகிய பழமாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

21. உருவில் PQRSD ஒரு வட்ட நாற்பக்கல். O மையம் ஆகும்.
$R\hat{Q}X=70^0$ ஆயின்
I) $P\hat{S}R$
II) $P\hat{O}R$ ஆகிய கோணங்களைக் காண்க.





22. 1/v + 2/V = 1 எனும் சமன்பாட்டைத் தீர்த்து V ஐக் காண்க.

23. செங்கோணத்தை△ஆக்கும் பக்கங்களில் ஒன்று 10cm நீளமுள்ளதாக உள்ள செங்கோண முக்கோண ஒன்றின் பைதகரசின் திரிதங்களை எழுதுக. (மூன்று பக்கங்களின் நீளங்களை எழுதுக.)

24. பத்திரிகை விற்கும் முகவர் ஒருவருக்கு விற்பனை செய்யும் அளவின் 6% தரகு வழங்கப்படுகிறது. அவர் கடந்த மாதம் ரூபா 1800 தரகாகப் பெற்றாரெனின் பத்திரிகை விற்பனை செய்த தொகை என்ன?

25. உருவில் ABCD வட்ட நாற்பக்கல். BC=CD ஆகும்.





$B\hat{A}D=60^0$, $\hat{x}^0$, $\hat{y}^0$ ஆகிய அளவுகளைக் காண்க.

26. நத்தார் தாத்தா ஒருவருக்கு கூம்பு வடிவிலான ஒரு தொப்பி செய்ய வேண்டியுள்ளது. அதன் அடிவிட்டம் 21cm உம், சாயுயரம் 50cm உம் ஆகும். இத்தொப்பியை செய்யத் தேவையான கடதாசி அட்டையின் பரப்பளவு யாது? (கூம்பின் மேற்பரப்பளவு $= \pi r^2+\pi rl$)


27. ரூபா 10/- பெறுமதியுடைய பங்குகளை ஒன்று ரூபா 15/- வாங்குவதற்கு ஒருவர் ரூபா 2400/- ஐ முதலீடு செய்கிறார். அவர் வாங்கிய பங்குகள் எத்தனை?

28. 5m நீளமும், 3m அகலமும் உடைய செவ்வகவடிவ நீர்த்தொட்டி ஒன்று கட்ட வேண்டியுள்ளது. 1m நீளத்துக்கு கட்டுவதற்கு 5 செங்கற்கள் தேவை. தொட்டியைச் சுற்றி 12 வரிசை கற்கள் உயரமாக அடுக்கி அமைக்க வேண்டுமாயின் எத்தனை செங்கட்டிகள் தேவை?

29. 4m குறிப்பது 1cm என்ற அளவுக்கு வரையப்பட்ட பண்டசாலை ஒன்றின் முன்பக்கத் தோற்றம் படத்திலுள்ளது. அதன் உண்மையான உயரம் AB எத்தனை மீற்றராகும்.




30. உருவில் y இன் பெறுமதி எவ்வளவு?




## பகுதி 11

1. காரணிப்படுத்துக.
$x^2-C+X-C^2$

2. ஒரு பின்னத்தின் பகுதி எண்ணை ஒன்றால் குறைத்து தொகுதி எண்ணுடன் ஒன்றைக் கூட்டினால் பின்னம் 11/3 ஆகும். பகுதி எண்ணுடன் இரண்டைக் கூட்டித் தொகுதி எண்ணை ஒன்றால் குறைத்தால் பின்னம் 1/3 ஆகும்.
   1. அந்தப் பின்னத்தைக் X\Y எனக் கொண்டு, X,Y இல் இரு சமன்பாடுகளைப் பெறுக.
   2. அவற்றைத் தீர்த்து அந்தப் பின்னத்தைக் காண்க.

3. அடுத்துவரும் இரு நேர் ஒற்றை எண்களின் பெருக்கம் 63 ஆகும்.
   1. அவற்றில் பெரிய எண் n எனில், n இல் இருபடிச் சமன்பாடு ஒன்றை அமைக்க
   2. அதனைத் தீர்த்து அந்த இரு எண்களையும் காண்க.

2.


1. சுருக்குக (விடையை நேர்ச்சுட்டியில் தருக)

$(4X^{-2})^{1/2} \times \frac{1}{(8x^3)^{1/3}}$

2. 2 மட $_{10}^{5}$ - மட$_{10}$3= 2 மட $_{10}$X+ மட$_{10}$ 12 X இன் பெறுமானம் யாது?

3. மடக்கை அட்டவணையை உபயோகித்துப் பெறுமானம் காண்க.
$\frac{2.65^2 \times 32.5}{\sqrt{16.5}}$

**தொகுப்பு : S.சிவா**



யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் நிமலராஜனின் 5ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் அவரது மாமியார் திருமதி கதிர்வேலு ஈகச்சுடரேற்றுவதையும், அவரது சிறிய தந்தையார் லோகநாதன் மலர்மாலை அணிவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- அருள்

# வடமராட்சி கரையோரப் பகுதி கடல்வான்கள் புனரமைப்பு!

வடமராட்சி—

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதி கடல் வான்கள் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

இந்தச் செயற்திட்டத்தை ஜேர்மன் அக்றோ அக்சன் நிறுவன நிதிப்பங்களிப்புடன் சேவா லங்கா நிறுவனம் மேற்கொண்டு வருவதாக சேவா லங்கா நிறுவன சுனாமித்திட்ட முகாமையாளர் க.உஜிதன் தெரிவித்தார்.

தும்பளை கிழக்கில் இருந்து தொண்டமானாறு வரையான14 கிலோ மீற்றர் கரையோரப் பகுதியிலுள்ள 24 கடல் வான்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் புதிதாக இரண்டு கடல் வான்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 20 கடல் வான்களின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்கரையோரப் பகுதியும், கடல் வான்களும் புனரமைக்கப்பட்டு வருவதால் கடற்தொழிலாளர்கள் இலகுவாக தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும், இந்த தொழிலாளர்களைக் கொண்டு சம்பளத்துடன் கூடிய வேலையாக புனரமைப்புப் பணிகள், பழு தூக்கும் இயந்திரத்தின் உதவியுடன் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (91)

# கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 204 பாடசாலைகள் அபிவிருத்தி

சுதுமலை—

கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இந்த வருடம் 204 பாடசாலைகள் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இந்தப் பாடசாலைகளில் தேசிய பாடசாலைகள் 104, நவோதய பாடசாலைகள் 100ம் அபிவிருத்தி செய்யப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

துரித அபிவிருத்தி வேலைகளாக மலசலகூடம், குடிதண்ணீர் வசதி, அவசியமான திருத்த வேலைகள், பாடசாலைகளின் பெயர்ப் பலகைகள், சுற்றுமதில்கள் என்பன நிர்மாணிக்கப்படவுள்ளன. அத்துடன் பாடசாலைகள் வர்ணம் தீட்டி புது மெருகூட்டப்படவுள்ளன.

அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 157 சிங்கள மொழி மூல பாடசாலைகளும், 47 தமிழ்மொழி மூல பாடசாலைகளும் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 5 தேசிய பாடசாலைகளும் இருபது நவோதய பாடசாலைகளுமே அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

# வளப்பற்றாக்குறை காரணமாகவே கழிவுகளை அகற்றுவதில் தாமதம்!

## மாநகரசபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

யாழ். மாநகர சபை நாளாந்தம் சேரும் கழிவுப் பொருட்களை விரைவாக அகற்றமுடியாமல் இருப்பதற்கு வளப்பற்றாக் குறையே முக்கிய காரணம் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினமும் கழிவுப்பொருட்கள் சேருகின்றன. அவ்வாறு சேருகின்ற கழிவுப் பொருட்களை முழுமையாக அகற்றுவதற்கு வளப்பற்றாக் குறை முக்கிய காரணமாக இருக்கின்றபோதிலும் கழிவுப்பொருட்களை அகற்றிக்கொள்வதற்கு பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை.

மக்கள் கழிவுப் பொருட்களை ஒதுக்கப்பட்ட இடங்களில் கொட்டுவதில்லை. இதனால் கழிவகற்றுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது.

யாழ்.மாநகரசபை கடந்த இரண்டு வாரமாக இரட்டிப்பு வேலை செய்து கழிவு அகற்றிய போதிலும் முழுமையாக அகற்ற முடியாத நிலை தோன்றியுள்ளது.

மாநகரசபையால், கழிவு அகற்றுவதற்கு வளப்பற்றாக் குறை இருப்பதாக பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியபோதிலும், இது வரை காலமும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சங்கானை பிரதேச செயலகத்தில் சிறுவர், முதியோர் தின நிகழ்வு

சுதுமலை—

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேசத்தால் முதியோர், சிறுவர், வலுவிழந்தோர் கௌரவிப்பு விழா நாளை காலை 10 மணிக்கு பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாணப் பொது நிர்வாக முன்னாள் செயலாளர் கமலா சிவசிதம்பரம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஏ.அன்ரனி ராஜன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் எஸ். ஜெயராஜ், தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கைலைநாதன், வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ்.கனகராசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (91)



சங்கானை மாவடி சனசமூக நிலையத்தினரின் பாவனைக்காக ரூபா பத்தாயிரம் பெறுமதிமிக்க மர அலுமாரி ஒன்றை ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி இ.அரியநாயகம் வழங்கியபோது, நிலையத் தலைவர் க.ஸ்கந்தராசா (இடதுபுறம் நடுவில் நிற்பவர்) பெற்றுக் கொண்டதைக் காணலாம். (48)

# போதிய வசதிகளின்றி இயங்கும் கற்கோவளம் மீன் சந்தை!

பருத்தித்துறை—

பருத்தித்துறை - கற்கோவளம் மீன் சந்தை அடிப்படை வசதிகள் இன்றி இயங்குவதால் வியாபாரிகளும், சந்தைக்குச் செல்லும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்தைக்கென கிணறு, மலசலகூடம் அமைக்கப்பட்டிருந்தும் பாவிக்கமுடியாதிருப்பதாகவும் சந்தை வளவு முட்புதர்கள் வளர்ந்து காடுமண்டிக் கிடப்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

சந்தைக் கிணறு பாவிக்கமுடியாதிருப்பதுடன் மலசலகூடம் பூட்டிவைக்கப்பட்டுள்ளதனால் இயற்கை உபாதைகளைக்கூட மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (91)

# சேதமடைந்த மதகு பொதுமக்களால் திருத்தம்

மல்லாகம்—

சுன்னாகம் பொது நூலகத்துக்கு முன்பாக உள்ள மதகு றோட்டறிக் கழகத்தாலும், அந்தப்பகுதியைச் சேர்ந்த மக்களாலும் புனரமைக்கப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக இந்த மதகு திருத்தப்படாமல் காணப்பட்டது. இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

இதுகுறித்து பொதுமக்கள் பிரதேச சபைக்கு அறிவித்தும் மதகைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதையடுத்தே நேற்றுமுன் தினம் இந்த மதகு றோட்டறிக் கழகத்தாலும் இந்தப்பகுதி மக்களாலும் புனரமைக்கப்பட்டுள்ளது. (68)

# கூட்டுறவு அபிவிருத்தி திட்டங்கள் குறித்த விபரங்களை அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்—

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் 2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப விவசாய மற்றும் மீன்பிடித்துறைகளுக்கான திறைசேரி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் 2006 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ள திட்டங்கள் தொடர்பான விபரங்களை உடன் அனுப்பிவைக்கும்படி வடக்கு - கிழக்கு மாகாண பதில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்க பதிவாளருமான ஆ.சுப்பிரமணியசர்மா - யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

கடற்தொழில் அபிவிருத்திக்கான திட்ட முன்மொழிவுகளை இந்த மாதம் 18 ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்திடம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை இரண்டு



பெயர் : தி.சபூரா
முகவரி : சுவிஸ்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்களுடன் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# அரசு போரைத் தொடங்குமானால் எதிர்கொள்ளத் தயாராகும் மக்கள்!

## விடுதலைப்புலிகள் ஏடு தெரிவிப்பு

கிளிநொச்சி —

தமிழரின் அரசியல் வழி ஆர்வத்தைத் தவறாகக் கணித்து அரசு மீண்டும் போரைத் தொடங்க' விரும்பினால் அதற்கு முகம் கொடுக்க மக்கள் தயாராகி வருகின்றனர். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் 126 ஆவது குரலின் பிரதான முகப்புச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மூன்றரை வருடத்திற்கு முன்னர் போர்நிறுத்த உடன்பாடு காணப்பட்ட போது, போருக்கு முடிவு நெருங்கிவிட்டது சமாதானம் தழைத்தோங்கப் போகின்றது என்று தமிழ் மக்கள் குதூகலித்தனர்.

சர்வதேசத்தின் நேரடிக்கண்காணிப்பில் மூன்றாந்தரப்பு நாடொன்றின் மத்தியஸ்துவப் பணியின் கீழ் நடைபெறுகின்ற சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னேற்றம் காணும் என்று தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

ஆனால் சர்வதேச சமூகத்தையும் மதிக்காத சிங்கள அரசின் கடும் போக்கால், சமாதான முயற்சிகள் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளது. இதே சமயம் தமிழருக்கு உரிமை வழங்கக் கூடாது என்ற கோஷத்தை முன்வைத்து சிங்களத்தின் ஆளும் கட்சி ஜனாதிபதி தேர்தலை எதிர் கொள்ளும் அளவுக்கு தற்போதைய சமாதான முயற்சிகள் அவநம்பிக்கை தரும் வகையில்உள்ளன.

சர்வதேச மத்தியத்துவம் இலங்கைத் தீவின் சமாதான முயற்சிக்கு வலுச்சேர்க்கும் என்ற சமாதான விரும்பிகளின் எதிர்பார்ப்பு கேள்விக்குறியாகிவிட, மறுபுறத்தில் போர் வெறியர்களும், பேரினவாதிகளும் ஒன்றிணைந்து பலம் பெறுகின்ற அரசியற்சூழலே சிங்களத்தில் இன்று காணப்படுகிறது.

இனப்பிரச்சினை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக நிகழ்ந்த போர் நிறுத்த உடன்பாட்டை சிங்கள அரசு ஒரு சமாதானத்தின் திறவுகோலாக இன்றுவரை ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்தும் அதை முடக்கியே வைத்திருக்கிறது.

போர்நிறுத்த உடன்பாட்டை முறித்துக் கெண்டு புலிகளுடன் போரைத் தொடங்கும் எண்ணத்துடனேயே வெளிநாட்டில் பேச்சுக்கள் இல்லை என்ற அரசியல் நிலைப்பாட்டிற்கு சிங்கள அரசு வந்தது.

இவ்வாறு சர்வதேச சமூகத்தை ஏமாற்றி திசை திருப்புவதற்காக சிங்கள அரசுகள் காலங்காலமாக சில காரணிகளை முன்வைத்து அமைதிவழி முயற்சிகளை முறியடித்து வருகின்றன.

சிங்கள அரசின் தொடர்ச்சியான இனவாத நிலைப்பாடும், ஏமாற்று அரசியலும் தமிழ் மக்களுக்கு சலிப்பையும், விரக்தியையும் ஏற்படுத்தி வருகின்றன. சிங்கள அரசு எவ்வகையான அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வந்தாலும், தமிழ்மக்களை ஏமாற்ற முடியாது என்பதை அவர்கள் பலவழிகளில் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இரண்டு தசாப்த காலப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழ் மக்கள்தான். இந்த வகையில் தமிழ் மக்கள் போரை விரும்பவில்லை. சமாதான வழி மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணவே அவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் தமிழரின் அமைதி வழிஆர்வத்தை சிங்கள அரசு தவறாகக் கணித்து, மீண்டும் போரைத் தொடங்க விரும்பினால் அதற்கு முகங்கொடுக்கவும் மக்கள் தயாராகி வருகின்றனர். ஆயுதப் பயிற்சிகள் பெற்று புலிகள இயக்கத்தின் துணைப் படைக்கட்டமைப்பில் தமிழ் மக்கள் பெருமளவில் இணைந்து வருகின்றனர். ஆக்கிரமிப்புப் பகுதிகள் - விடுவிக்கப் பட்ட பிரதேசங்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல் தமிழர் தாயக நிலப் பகுதிகள் எங்குமே இந்த துணைப் படைக் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இராணுவப் பயிற்சிகள் பெறுகின்றனர்

தேவை ஏற்பட்டால் சிங்களப் படைகளுடனும் போரிடத் தயார் என்ற அரசியல் செய்தியை சிங்கள அரசிற்கும் தமிழ் மக்கள் தெரிவிக்க விரும்புகின்றனர். சிங்கள அரசு தொடர்பாகவும் சமாதான அரசியலை அது நடத்த முனையும் வழிமுறை தொடர்பாகவும் தமிழ் மக்கள் எதிர்மறையான கருத்தையே வைத்துள்ளனர். இதை சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்ந்து சமாதானத்தை ஒரு தந்திரோபாய அரசியலாக சிங்களம் பயன்படுத்தி, தமிழரின் விடுதலை உணர்வை நசுக்கிவிடலாமென்று கனவு காண முடியாது. அத்துடன் அது தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் முடியாது என அதில் கூறப்பட்டுள்ளது.

# கிராமிய அபிவிருத்தி வங்கியில் சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வு

கிளிநொச்சி —

உலக சேமிப்பு வாரத்தையொட்டி சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்து அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கிராமிய அபிவிருத்தி வங்கியினால் சேமிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான முன்னேற்பாட்டு செயற்பாடுகளில் கிராமிய அபிவிருத்தி வங்கி செயற்பட்டு வருகிறது.

இந்த வாரம் எதிர்வரும் வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ளதாக கிராமிய அபிவிருத்தி வங்கி முகாமையாளர் தவக்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் காலப்பகுதியில் நிலையான சேமிப்பு உட்பட சிறுவர் மேம்பாட்டு சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கும் வாடிக்கை யாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

இந்த சேமிப்பு வாரத்தில் சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதோடு இந்த வங்கியினால் நடமாடும் சேவையொன்றின் மூலம் கிராமிய மக்களுக்கான வங்கி சேவையும் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்தார். (அ)

# பொருண்மிய மதியுரையகத்தால் கைப்பணிப் பயிற்சி நிலையம் திறப்பு

பளை —

தமிழீழத்தின் முக்கிய மூல வளங்களில் ஒன்றான பனை அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு பொருண்மிய மதியுரையக ஏற்பாட்டில் மாசார் பளையில் பனைசார் கைப்பணிப் பயிற்சி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

திட்ட இணைப்பாளர் ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்தமிழீழ தேசியக் கொடியை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் திலக் ஏற்றிவைத்தார். இந் நிகழ்வின் வரவேற்புரையை பனை அபிவிருத்தி சபை கிளிநொச்சி பிராந்திய இணைப்பாளர் ஏ.வி.கே மாணிக்கம் நிகழ்த்தினார்.

பயிற்சி நிலையக் கட்டடத்தை பளை பிரதேச செயலர் ற. பத்மசிறி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் சிறப்புரையை பனை அபிவிருத்தி சபையின் ஆலோசகரும் பனை அபிவிருத்தி ஆய்வாளருமான வி.ஜி. தங்கவேலு நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சுகாதார விழிப்புணர்வு

ஆழியவளை —

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை அபிவிருத்திக்குழுவினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் மாமுனை, குடாரப்பு பகுதிகளில் சுகாதார விழிப்புணர்வு செயற்பாடு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆழியவளை திலீபன் மருத்துவ சேவையினர், வடமராட்சி நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர், தொண்டர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் பங்குபற்றினர்.

# மன்னாரில் நெற்களஞ்சியங்களை விரைவில் புனரமைக்க நடவடிக்கை

## -மன்னார் அரச அதிபர் தெரிவிப்பு-

மன்னார் —

உலக வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திலுள்ள இரண்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்கால்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக மன்னார் அரச அதிபர் வே. விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் நீர்ப்பாசனத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக் கையில்-

கட்டுக்கரைக்குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால்களான சின்ன உடைப்பு மற்றும் 11 ஆம் கட்டை வாய்க்கால்கள் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உள்ளன. இது தொடர்பாக அப்பகுதி விவ சாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனையடுத்தே சின்ன உடைப்பு வாய்க்கால் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. அதேவேளை முருங்கன் பகுதி 11ஆம் கட்டை வாய்க்காலை புனரமைக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கென 170 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. இதே வேளை முருங்கன், காத்தான் குளம், அடம்பன் ஆகிய பிரதேசங்களிலுள்ள நெற்களஞ்சியங்களை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர் -19

1867 : ரஷ்ய அமைச்சர் எடோட்டிஸ் டோஎலிலுக்கும், அமெரிக்க செயலாளர் வில்லியம் ஹென்றி ஸீ வார்ட்டிற்கும் இடையில் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக நேற்று அமெரிக்கா அலஸ்கா தீவைக் கொள்வனவு செய்தமை பற்றிய விமர்சனங்கள் அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவை அன்று இந்தக் கொள்வனவை ஸீ வார்ட்டின் முட்டாள் தினம் என்று வர்ணித்திருந்தன.

1889 : இந்தியாவில் முதன்முதலாக அஸாமில் திக்பாய் என்ற இடத்தில் எண்ணெய்கிணறு வெற்றிகரமாகத் தோண்டப்பட்டது. 200 மீற்றர் ஆழத்திலேயே எண்ணெய் கிடைத்தது.

1917 : வட இங்கிலாந்தின் தொழில் நகரங்கள் மீது ஜேர்மனியின் போர் விமானங்களின் மௌனத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களால் லண்டனில் மட்டும் 83 பேர் உயிரிழந்தனர்.

1926 : லண்டனில் கூடிய பிரிட்டிஷ் கொமன் வெல்த் மாநாடு டொமினியன்களுக்கும் சம உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பிரிட்டனும் டொமினியன்களும் சம அந்தஸ்துள்ள தன்னாட்சி அமைப்புக்கள் உள்நாட்டு விவகாரங்களிலோ, வெளிநாட்டு விவகாரங்களிலோ ஒன்றுக்கொன்று தாழ்ந்ததல்ல என்று அறிக்கை வெளியிட்டது.

1943 : ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளது வெளியுறவு அமைச்சர்கள் மொஸ்கோவில் இருந்த சீனத் தூதுவருடன் பரஸ்பர உதவிகள் பற்றிய பேச்சுவார்த்தையைத் தொடக்கினர்.

1951 : சுயஸ் கால்வாய்ப்பகுதியின் ஆதிக்கத்தை பிரிட்டிஷ் படைகள் எடுத்துக் கொண்டன.

1954 : சுயஸ் கால்வாய் தொடர்பில் பிரிட்டனும் எகிப்தும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. இதன்படி பிரிட்டன் தனது படைகளை 20 மாதங்களில் திருப்பி அழைத்துக் கொள்ள ஒத்துக் கொண்டது. எகிப்து எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லாது கால்வாயில் போக்குவரத்துச் செய்ய உத்தரவாதம் அளித்தது.

1956 : இரண்டாவது அரபு- இஸ்ரேல் போர் ஆரம்பமானது. சுயஸ் கால்வாய் வழியாக இஸ்ரேல் கப்பல்கள் செல்ல எகிப்து அனுமதிக்காததைத் தொடர்ந்து இந்தப் போர் ஆரம்பமாகியது.

1960 : நீர் மின்சார உற்பத்தி, வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல் என்ற இரு நோக்கங்களுக்காகவும் அமெரிக்காவும், கனடாவும் இணைந்து கொலம்பியா நதித்திட்டத்தை நிறைவேற்ற ஒப்புக் கொண்டன.

1967 : இந்த வருடம் ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஏவப்பட்ட மரீனர் - 5 என்ற விண்கலம் வெள்ளிக்கிரகத்துக்கு 8400 கி.மீ.தூரம் வரை சென்றடைந்து, வெள்ளிக்கிரகம் பற்றிய பல முக்கிய தகவல்கள், குறிப்புக்களை அனுப்ப ஆரம்பித்தது.

1970 : முதன் முதலாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டதும், ஒலியை விட வேகமாகச் செல்லக் கூடியதுமான மிக் - 2 வகை போர் விமானம் இந்திய விமானப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

1973: இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்ட அரபுப் பகுதிகளை திருப்பி ஒப்படைக்கும்படி செய்ய அமெரிக்காவும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் இஸ்ரேலை நிர்ப்பந்திக்க வேண்டும் எனக் கோரி அரபு நாடுகள் தமது எண்ணெய் உற்பத்தியைப் 10 சதவீதத்தால் குறைத்துக் கொள்ளும் முடிவை எடுத்தன. அமெரிக்காவுக்கான எண்ணெய் ஏற்றுமதிக்கும் தடை விதித்தன.

1977 : அமெரிக்க வானியலாளர் சார்ல்ஸ் - டி - கோவால் என்பவரால் சனிக்கிரகத்துக்கும், யுரேனஸுக்கும் இடையே ஒரு குறுங்கோள் சுற்றிவருவது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னாளில் அதற்கு சிரான் எனப் பெயரிடப்பட்டது.

** : தென்னாபிரிக்காவில் வெள்ளையின அரசால் கறுப்பு இனத்தவர்கள் மீது கடுமையான அடக்கு முறைகள் சட்டம் மூலம் இறுக்கப்பட்டன. கறுப்பினத்தவர்களது சங்கங்கள், கட்சிகள் தடைசெய்யப்பட்டன. கறுப்பினத்தவர்கள் நடத்திய பத்திரிகைகள் மூடப்பட்டன. பத்திரிகை ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

1983: கிரனடா பிரதமரும் மற்றும் மூன்று அமைச்சர்களும் அந்தநாட்டு இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1984 : போலந்தில் பாதிரியார் ஒருவர் பொலிஸாரால் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

1994 : அங்கோலாவில் அரசுக்கும் புரட்சிப்படையினருக்கும் இடையே சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டது.

தொகுப்பு- சந்துரு

# கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் காணி சம்பந்தமான நடமாடும் சேவை

கிளிநொச்சி —

கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தால் நடமாடும் சேவை மூலம் காணிசம்பந்தமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று கனகாம்பிகை குளம் கிராம மக்களுடைய காணி சம்பந்தமான விசாரணைகள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெற்றன.

இதே போல நாளை கோணாவில் கிராம மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை கோணாவில் கிராம அபிவிருத்திச் சங்கமண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளது என கரைச்சிப் பிரதேச செய லகக்காணி அலுவலர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

மனிதர்கள் தங்கள் தேவைப்பாடுகளையே மிக முக்கியமானதாகக் கருதுகிறார்கள். திறமைகளை அல்ல.

- நெப்போலியன் பொனபார்ட் -

## நமது நோக்கு

# மாறுமா இவர்கள் குணம்?

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் உள்ள இரண்டு பிரதான வேட்பாளர்களுமே எதிரெதிர்த் தரப்புக்களால் குற்றச்சாட்டுக்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' என்ற வங்கிக் கணக்குத் தொடர்பான குற்றச்சாட்டு இருந்தது.

இப்போது ரணில்மீது ஆளும் கட்சியால் கணினி கொள்வனவில் ஊழல் செய்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு பிரதான கட்சிகளுமே தத்தமது குற்றச்சாட்டுக்களை தேர்தல் பிரசார மேடைகளில் முன்வைத்து வருகின்றன.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்ற சுனாமி நிவாரண வங்கிக்கணக்கு தொடர்பாக சி.ஐ.டி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், தேர்தல் முடியும்வரை இந்த விசாரணைகளை நீதிமன்றம் மூலம் நிறுத்த முனைகிறது மஹிந்த தரப்பு. அதேவேளை, ரணில் மீதான குற்றச்சாட்டுக்களை இப்போதுதான் ஆளும் கட்சி முதன் முறையாக முன்வைத்திருக்கிறது.

இரு கட்சிகளுமே எதிர்த்தரப்பு வேட்பாளர்கள் மீது சேறுபூசும் பிரசாரங் களை மேற்கொண்டுவரும் நிலையில் வாக்காளர்கள் மத்தியில் இரண்டு பேருமே இப்படிப்பட்டவர்களா என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பு.

அதேவேளை, இத்தகைய பிரசாரங்களின் மூலம் இந்த இரண்டில் ஒரு வேட்பாளர்களின் வெற்றியை எவராலுமே தடுத்துவிட முடியாது.

தேர்தல் என்று வரும்போது இப்படியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது ஒன்றும் புதிதான விடயமாக இல்லாதபோதும் - வேட்பாளர்கள் இருவரும் ஒரேமேடையில் விவாதம் நடத்துவது வாக்காளர்களுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கமெனலாம்.

மேற்கு நாடுகளில் ஜனாதிபதி அல்லது பிரதமர் வேட்பாளர்கள் நேரடி விவாதம் நடத்துவது வழக்கம். இத்தகைய விவாதங்களின் மூலம், செல்வாக்கு சரிவு நிலையில் இருந்த பல வேட்பாளர்கள் கூட வெற்றியைப் பெறும்நிலை காணப்பட்டது.

நேரடிவிவாதம் நடத்தும் ஜனநாயக அரசியல் பண்பு இலங்கைக்கு ஒத்துவருமா என்ற கேள்விக்கே இடமில்லை. ரணிலும், மஹிந்தவும் நேரடி விவாதம் நடத்தி - தத்தமது குற்றச்சாட்டுக்களை மக்களின் முன் வைத்தால் அங்கே வாக்காளர்களுக்கு ஒரு தெளிவு பிறக்குமல்லவா?

ஆனால், இந்த நேரடி விவாதத்துக்கு பிரதமர் மஹிந்தவின் தரப்பில் தயக்கம் காட்டப்படுவதாகத் தெரியவருகிறது. நேரடி விவாதத்துக்கு மஹிந்த தரப்பு காட்டும் தயக்கம் - அவர்கள் பக்கத்தில் இருக்கும் பலவீனத்தையே காட்டிநிற்கிறது.

மேற்கு நாட்டு நிர்வாக முறைகளை நடைமுறைப் படுத்துவதும் - வாழ்க்கை முறைகளை வாழ்வதற்கும் முற்படும் தென்னிலங்கை அரசியல் வாதிகள் - ஏன் மேற்குநாட்டு அரசியல் நாகரிகங்களைக் கடைப் பிடிக்க மறுக்கின்றனரோ தெரியவில்லை.

ஆளும் கட்சி - எதிர்க்கட்சி உறவுமுறையாயினும் சரி, நிர்வாகத்தில் - மக்கள் நலனில் காட்டும் அக்கறையாயினினும் சரி இலங்கையின் அரசியல்வாதிகள் மேற்கு நாட்டுப்பாரம்பரியங்களுக்கு உட்பட மறுக்கின்றனர்.


எங்கே, எப்படி ஆட்சியைக் கவிழ்க்கலாம், அடுத்தவரின் காலைவாரி மக்கள் பணத்தை மோசடி செய்து, பணம் சம்பாதிக்கலாம் என்ற குறியுடன் இருக்கும் இலங்கை அரசியல்வாதிகளால் நாடுதான் கெட்டு குட்டிச்சுவராகிறது.

இப்படிக் கூறுகின்றபோது ஒன்றும் மேற்கு நாடுகளை புகழ்வதாகக் கருதக்கூடாது. நல்லன எங்கிருந்தாலும் அதைப் பின்பற்றுவதற்கு எப்போதும் தயங்கக்கூடாது. அதை இலங்கையின் அரசியல்வாதிகள் ஒருபோதும் புரிந்துகொள்ளப்போவதில்லை.

இப்படியே இருப்பதன் மூலம்தானே இவர்களால் மக்களைச் சுரண்டிக்கொண்டு இருக்கமுடியும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# நம்பிக்கையில்லாமல் நடக்கும் பேச்சுக்களால் சமாதானம் வருமா?

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு போர் நிறுத்த ஒப்பந்தம் முழுமையாகச் செயற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அரச சமாதான செயலகத் தலைவர் ஜயந்த தனபால நோர்வே சமாதானத் தூதுவர் புறூவ் ஹொவ்டேயிடம் வற்புறுத்தியதாக ஆங்கிலப் பத்திரிகை முதல் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதையேதான் ஒரு நடுநிலையான இடத்தில் விரைவில் நேரடியாகப் பேச்சு நடத்த வேண்டுமென்று விடுதலைப் புலிகள் ஏற்கனவே நோர்வே சமாதானத் தூதுவரிடம் தெரிவித்திருக்கின்றனர். எங்கே பேச்சு நடத்த வேண்டுமென்பதை நோர்வே சமாதானத் தூதுவரும் சிறிலங்கா அரசாங்கமும் தான் இனி முடிவு செய்ய வேண்டும். இதை விடுத்து விடுதலைப் புலிகள் பேச்சுக்குவரவேண்டும் என்று சும்மா திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இருக்கிறதா என்று கேட்டபடிவந்தார் நண்பர் பரமசிவம்.

போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றிய பேச்சாக இருந்தாலும் சமாதானம் பற்றிய பேச்சாக இருந்தாலும் இரு தரப்பும் இதயசுத்தியோடு பரஸ்பர நம்பிக்கை வைத்துப் பேச வேண்டும். இரு தரப்பிலும் நம்பிக்கை ஏற்படுவதற்கான அறிகுறியே இல்லையே என்று நான் சொன்னேன்.

விடுதலைப் புலிகளை எப்படி ஒழிக்கலாம் வெளிநாடுகளில் புலிகளின் நடவடிக்கையை எப்படிக் கட்டுப்படுத்தலாம் எப்படி வெளிநாடுகளில் தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுப்பது எப்படிப் பிரசாரம் செய்வது என்பது பற்றி அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுகிறது. வெளிநாடுகளிலுள்ள சிறிலங்கா அரசின் ராஜீயத் தூதுவர்கள் இந்தச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

புலிகள் கொலை செய்கிறார்கள். சிறுவர்களைக் கடத்திப் படையில் சேர்க்கிறார்கள் என்று பிரசாரம் செய்கிறார்கள். இவர்கள் தவிர வெளிநாடுகளிலுள்ள சிங்களவர்களையும் புலி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குத் தூண்டிவிடுகிறார்கள். இவை தவிர ஊடகங்கள் புலி எதிர்ப்புப் பிரசாரத்திலேயே தீவிரமாக ஈடுபடுகின்றன. மொஹான் சமரநாயகா என்பவர் சில தினங்களுக்கு முன் எழுதிய ஒரு கட்டுரையில் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குப் புலிகள் செல்வதைத் தடுப்பதற்கு எடுத்த முடிவை சிறிலங்கா அரசு சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

சர்வதேச சமூகம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கூறினாலும் எல்.ரி.ரி.ஈ. இன்னமும் ஈழம் தொடர்பான தமது சொந்தக் கருத்தைக் கைவிட்டதாக எமக்குத் தெரியவில்லை என்று எழுதுகிறார். இந்த நாட்டுச் சமாதானம் பற்றி எதிர்பார்ப்பு வைப்பதாயின் எல்.ரி.ரியை கட்டாயப்படுத்துதல் அவசியம். அதன் மூலம் எல்.ரி.ரி.ஈயை அடக்க வேண்டும். விசேஷமாக எல்.ரி.ரி.ஈ. தலைமைக்கு வலிக்கக்கூடிய அடி கொடுக்காமல் அவர்களை அடக்க முடியாதென்ற சமூக ரீதியிலான கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன் என்று சமரநாயகா எழுதுகிறார் என்று பரமசிவம் சொன்னார்.

இதுதான் சிங்களப் பேரினவாதிகளின் கருத்தாக இருக்கிறது. இந்த நிலையில் எப்படிப் போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றியோ சமாதான நடவடிக்கைகள் பற்றியோ இதயசுத்தியுடன் பேச முடியும். எப்படி சமாதானத்தை அடைவதற்கு முயற்சி செய்ய முடியும்? என்று கேட்டேன்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்கள் புலிகளுடன் பேசுவோம் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று பிரசாரத்துக்காகப் பேசினாலும் இவர்கள் எல்லோரும் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றும் ஈழத்தைப் புலிகள் கைவிடவேண்டுமென்றும் கூறுகிறார்கள். இப்போது கூட சிலர் சமஷ்டி ஆட்சி அமைப்பு பற்றிப் பேசினாலும் ஒற்றையாட்சியையே சிங்களப் பேரினவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர் என்று நான் சொன்னேன்.

ஆயுதங்களைப் புலிகளிடமிருந்து களைய வேண்டுமென்று சொல்பவர்கள் புலிகள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை இன்னும் உணரவில்லையா? அல்லது உணர்ந்ததைக் காட்டிக்கொள்ளாமல் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி ஆயுதங்களைக் களையலாம் என்று கற்பனை செய்கிறார்களா? புலிகள் ஆயுதம் ஏந்தி இருக்காவிட்டால் இலங்கையில் தமிழினம் அழித்தொழிக்கப்பட்டிருக்கும் என்பதை தமிழ் மக்கள்தான் அறிவார்கள்.

தமிழினத்தை அழித்து ஒழிப்பதற்காகத்தான் ஆயுதகளைவு பற்றிப் பேசப்படுகிறதேயொழிய சமாதானத்துக்காக அல்லவென்பதைச் சர்வதேச சமூகம் உணரவேண்டும். புலிகளை அழிப்பது என்ற திட்டத்தில் தமிழ் இனத்தை அழிக்கவே சிங்களப் பேரினவாதம் செயற்படுகிறது. படைகளுக்கு ஆயுதங்களும் படைத்தளங்களையும் வாங்கிக் குவித்துக் கொண்டு புலிகள் ஆயுதம் வாங்குகிறார்கள் என்று கூச்சலிடுவதில் அர்த்தமில்லை.

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென அரசும் சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளும் உண்மையிலேயே உள்ளார்த்தமாக விரும்பினால் தமிழர் தாயகத்தில் குவிக்கப்பட்டிருக்கும் படைகளை அகற்ற வேண்டும் படைகளுக்கு ஆயுதங்கள் வாங்குவதை நிறுத்தி போர் எத்தனங்களைக் கைவிட வேண்டும். இதன் பின் புலிகளைப் பேச்சுக்கு அழைக்கவேண்டும்.

இவற்றைச் செய்தால் அரசின் செயலில் தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நம்பிக்கை ஏற்படும் இவை நடைபெறுமா? சமாதானமும் வருமா? என்று கேட்டுக்கொண்டு நடந்தார் பரமசிவம். ☆

# 1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலை நினைவுபடுத்தும் ஆனந்த சங்கரியார்

வயது போய் விட்டால் வாக்கு மாறும் என்று கூறுவார்கள். வாக்கு மாறுதல் என்னும் பொழுது வயது போனவர்கள் வழமையாகக் கதைப்பதை விடுத்து ஏதோ தொடர்பில்லாமல் பிதற்றுவார்களே அதையும் குறிப்பிடுவார்


தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இதனால் பிரச்சினைகள் தோன்றின. கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலம் சென்ற சி.கதிரவேலுப்பிள்ளை, மாவட்ட அபிவிருத்திச் சபைகளை எதிர்த்தவர்களில்

தங்களுடன் குருநாகலுக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் அதிசயம் என்ன வென்றால், இவ்வளவு அடாவடித் தனங்களைச் செய்தும் ஒரு உறுப்பினரைக்கூட அவர்களால் வெல்லவைக்க முடியவில்லை என்பதேயாகும்.

எனச் சத்தியக் கடதாசி முடிக்கு மளவுக்கு கூட்டணி தன்னைத் தாழ்த்திக் கொண்டதுடன், பலத்த விமர்சனத்துக்கும் உள்ளானது.

இந்த நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும் பொழுது ஆனந்த சங்கரியார் சிங்கள அதிகாரிகளை ஏன் விரும்புகிறார் என்பது துலாம்பரமாகத் தெரிகிறது. ஆனந்த சங்கரியார்

இதிலிருந்து தமிழ் அரச ஊழியர்கள் மேலும், தமிழ் மக்கள் மேலும் சங்கரியார் எத்தகைய சரியான கணிப்பு வைத்துள்ளார் என்பது தெரிகின்றது. இவர்கள் துரோகிகளுக்குத் துணை போக மாட்டார்கள்என்பதை அறிந்தபடியாலேயே சிங்கள, முஸ்லிம் உத்தியோகத்தர்களை



முழு பிரதிநிதித்துவத்தையும் தமிழர் கூட்டணியினரே கைப்பற்றிக் கொண்டனர். தமிழ் மக்கள் சிங்களத்து ஆட்சியாளர்

கள். அதேநேரம் உண்மைக்கு மாறாகப் பேசுபவர்களையும் வாக்கு மாறிவிட்டதாகவும், சொன்ன சொல்லை மீறிவிட்டதாகவும் பொருள் கொள்வதும் உண்டு. இங்கே இந்த இரண்டு கருத்துக்களுக்கும் மிகவும் பொருத்தமானவராக ஒருவர் இருக்கிறார்.

அரசியலிலே பல காலம் குத்துக் கரணங்கள் போட்டு மக்களால் வெறுத்தும், ஒதுக்கப்பட்டும், வயது முதிர்ந்த நிலையில் தளம்பல் நிலையிலுள்ள ஆனந்த சங்கரியாரே இன்று மாறாட்டமாக வாக்குப்போய் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார். பாவம் பொழுது போகவில்லையாக்கும் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தால், அவர் தனது எழுத்தைச் சிங்கள எசமானர்களுக்குச் சார்பாகவும், இந்திய விசுவாசத்தைக் காண்பிப்பதற்காகவும் பயன்படுத்தும் பொழுது அது தமிழினத்துக்கு ஆபத்தாக இருப்பதை உணராமல் இருக்க முடியாதுள்ளது. இவர் தேர்தல் பணிகள் பற்றி, தேர்தல் ஆணையாளருக்கு எழுதியதாக ஒரு கடிதம் ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

இந்தச் செய்தியை வாசித்த பொழுது 1981 ஆம் ஆண்டு நினைவுக்கு வருகின்றது. 1977 இல் தனித் தமிழீழத்துக்காக மக்கள் ஆணை பெற்ற - தமிழர் விடுதலைக்கூட்டணி, ஜே.ஆர் கொடுத்த மாவட்ட அபிவிருத்திச்சபைகள் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் வழிமொழிந்து ஏற்றுக் கொண்டிருந்தது.

முதன்மையானவர்.

ஆனால் கட்சிக் கட்டுப்பாடு, ஒற்றுமை என்பவற்றுக்கு மதிப்பளித்தார். ஆயுதம் ஏந்திய இளைஞர்களும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை எதிர்த்தனர். இந்தத் தேர்தல் காலத்திலே தான் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்ட காலம் இதுவே தான். சிங்கள ஆட்சியாளர்களின் அராஜகத்துக்கு எதிராக மக்கள் தமது உணர்ச்சியை மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தேர்தலில் காட்ட முடிவு செய்தனர். அது வரை தேர்தல் பற்றிய அதிக அக்கறை கொண்டிருக்கவில்லை மக்கள். ஆனால் ஜே.ஆர்.அரசும், அதில் அமைச்சர்களாயிருந்த லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்க ஆகிய இருவரும் குருநாகல் மாவட்டத்திலிருந்து அரச ஊழியர்களையும், வேறு காடையர்களையும் யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேர்தல் கடமைகளுக்காகச் சிறப்புப் புகைவண்டி மூலம் அனுப்பி வைத்தனர்.

சிங்கள ஆட்சியாளர்களின் அடாவடித் தனத்துக்கு எதிராகத் தமிழ் மக்கள் பெருமளவு வாக்களித்தனர். தேர்தல் பணிக்காக அனுப்பப்பட்ட சிங்கள அதிகாரிகள் கூட்டணிக்கு எதிராகக் கட்டுக் கட்டாக தாங்களே புள்ளடி போட்டு வாக்களித்தனர். இத்துடன் அவர்கள் நின்று விடவில்லை. பலவாக்குப் பெட்டிகளையும்

களுக்கு எதிராக அன்று வாக்களித்ததையும், சிங்கள தேர்தல் அதிகாரிகளின் அடாவடித்தனங்களையும் தெரிந்த நிலையில், ஆனந்த சங்கரியார் சிங்கள அதிகாரிகளைத் தேர்தலுக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுப்பது உள்நோக்கம்கொண்டதென்பது வெளிப்படையாகப் புலனாகின்றது.

இது மட்டுமல்ல; அப்பொழுது நடந்த தேர்தல் ஒழுங்காக நடைபெறவில்லை என்று யாரோ தேர்தல் வழக்கொன்று தாக்கல் செய்திருந்தார். இந்தத் தேர்தல் வழக்கில் தேர்தல் நேர்மையாகவும், சரியாகவும் நடந்ததாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சத்தியக் கடதாசி முடித்திருந்தனர் என்பதும் கவனிக்கப்படவேண்டியதாகும். தந்தை செல்வா உயிருடன் இருந்திருந்தால் இவ்வாறான சத்தியக் கடதாசி முடித்திருக்கமாட்டார்.

அரசியலில் நேர்மையாளரான தந்தை செல்வா சுயநலத்திற்காக அரசியல் நடத்துபவரல்ல. ஆனால் ஆனந்த சங்கரி போன்றோர் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் செல்வாக்குப் பெற்று வந்த காரணத்தால், குளறுபடியாக நடந்த தேர்தலை நேர்மையான தேர்தல்

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்கிறாரோ தெரியவில்லை. அவர் எவரையும் ஆதரிக்கலாம், ஆதரிக்கக் கூடியவர். அவருக்கு தேர்தல் பற்றி அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறிய கருத்துக்கள் ஒத்துவராது. தமிழ் மக்கள் தேர்தல் பற்றிச் சுதந்திரமாக முடிவெடுப்பார்கள் என்பது வேப்பங்காயாக அவருக்கு இருக்கும். அவ்வாறான சுதந்திர முடிவு எவ்வாறானதாக இருக்கும் என்பது நன்கு தெரியும். எனவே 1981 ஆம் ஆண்டில் நடந்தவாறு, நடக்க வேண்டுமானால் சிங்களத் தேர்தல் அதிகாரிகளை இறக்குமதி செய்வதே சிங்களத்து அரசியல் வாதிகளுக்குப் பயனுள்ளதாக அமையும் என்பது அவரது நோக்கமாகும்.

'தமிழ் அரச அதிகாரிகளை நம்ப முடியாதென்பதால் தமிழ்ப் பகுதிகளில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக சிங்களவர்களை அல்லது முஸ்லிம்களை நியமிக்க வேண்டும்.அத்துடன் வாக்களிப்பு நிலையங்களிலும் மூன்றிலொரு பங்கு சிங்களவர்களே நியமிக்கப்பட வேண்டும்' என்பது சங்கரியாரின் கோரிக்கை.

அவர் நாடுகின்றார். பாவம் சங்கரியார். இவரது எண்ணம் எதுவுமே நிறைவேறப்போவதில்லை. 1981 ஆம் ஆண்டில் தேர்தெடுக்கப்பட்ட சிங்கள உத்தியோகத்தர்களே ஐக்கிய தேசியக் கட்சிக்காக அனுப்பட்டனர். ஆனால் இந்த முறை தற்செயலாக அவ்வாறு சிங்கள உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டாலும், அவர்கள் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

தமிழ் மக்கள் தங்கள் தீர்ப்பைச் சுதந்திரமாக மட்டுமல்ல, சுதந்திரத்துக்குமான தீர்ப்பாகவே எடுத்து விட்டார்கள். இதை எவராலும் மாற்ற முடியாது. வெறும் அறிக்கைகள் விடுவதன் மூலமோ, அல்லது சில படங்களை ஒட்டுவதன் மூலமோ மாற்ற முடியுமென்று எவராவது நினைத்தால் அவர்கள் ஏமாறப்போவது நிச்சயமே. தமிழ் மக்கள் தங்கள் உறுதியை இந்தத் தேர்தலிலும் காட்டுவார்கள். ஒரே இலட்சியம், ஒரே தலைமை இதுவே தமிழ் மக்களின் அசைக்க முடியாத நிலைப்பாடாகும்.

பரணி

---

அழகுக் கலை....

# இளம் சமூகம் அழகுக் கலையை பயில்வதற்கு முன்வர வேண்டும்

இ.விஜேந்திரன்



கலைநயம்மிக்க அழகுக் கலைப் பொருள் வடிவமைப்பாளர் கல்லூரி வீதி இளவாலையில் வசிக்கும் முருகேசு ஆறுமுகத்துடனான நேர்காணல் -

'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்.

நாமும் நிலத்தினது நாகரிக வாழ்வுக்கு

நம்மால் இயன்ற பணிகள் நடத்திடுவோம்'

எனும் மஹாகவியின் கவி வரிகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், இவர் கழிவுப் பொருட்களால் அழகுப் பொருட்களை வடிவமைத்து வருகின்றார். தனது விடாமுயற்சியின் வெளிப்பாடாக, ஒத்த வகை ஊடகங்களால் பல்வேறு வகைப்பட்ட அழகுக் கலைப் பொருட்களைச் செய்து வருகிறார். கைவினை, கலைப் பொருள் வடிவமைப்பு தொடர்பாக அவர் கூறிய கருத்துக்கள்.

நான் ஓய்வு நேரங்களிலேயே இவற்றைச் செய்து வருகிறேன். மிக எளிமையான இலகுவாகக் கிடைக்கக்கூடிய பொருட்களையே பயன்படுத்தி வருகிறேன். சிப்பி, சங்கு, ஊரி, சிறிய மரவேர் (கிளைகளுடன் கூடிய சிறிய மரம்), எண்ணெய் வர்ணம், வெற்றுச்சோடாப் போத்தல் (றப்பர்), றெஜிபோம்,



பெற்றோல் இவையே அழகுப் பொருட்கள் வடிவமைக்கப் பயன்படும் மூலப் பொருட்களாகும். இவற்றில் எண்ணெய் வர்ணம், றெஜிபோம், பெற்றோல் போன்றவையே பணம் செலுத்திப் பெறக்கூடியவை. ஏனைய பொருட்களை எம் அயல் கிராமங்களிலேயே பெற்றுக் கொள்ளமுடியும்.

உருவ அமைப்புகளை வடிவமைக்க (அவற்றை ஒட்டுவதற்கு) றெஜிபோமை - பெற்றோலில் கரைத்து பெறப்படும் திரவத்தையே (கம்) பயன்படுத்துகிறேன். தென் பகுதியில் இருந்து கொண்டுவரப்படும் பொருட்களுக்கு நிகராக மிகக்குறைந்த விலையில் இவற்றைச் செய்து வருகிறேன். ஆனால் என்னால் வடிவமைக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான தளம் கிடைக்கவில்லை. ஒரு சிலரே வீட்டில் வந்து வாங்குகின்றனர்.

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் பொருட்களை காட்சிப்படுத்தினேன். இந்த இடங்களிலுள்ள மக்களால் கிடைத்த பாராட்டுதல்களே போதுமானது. கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளாரை நன்றியுடன் நினைவுகூர்வது இந்த இடத்தில் பொருத்தமானதாக அமையும்.

கடற்கரையிலுள்ள சங்கு, சிப்பி, ஊரி இவற்றுடன் வடிவமைக்கும் பொருட்களின் தன்மைக்கேற்ப மரவேர்களைப் பயன்படுத்தி வருகிறேன். இதனால் சூழலிலுள்ள கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவதுடன், சூழல் மாசடைவதையும் தவிர்க்க முடியும். அதே நேரம் வீடுகள், அலுவலகங்கள், வியாபார நிலையங்களை அழகுபடுத்தக் கூடிய காட்சிப் பொருட்களையும் தயாரிக்க முடிகிறது.

குருவிக் கூடு, பூமரக் கிளை, பூமரக்கிளையில் பறவைகள், பூமரக் கிளையுடன் மெழுகுதிரி இவற்றையே பல்வேறு அளவுகளில் செய்து வருகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் வடிமைக்கின்ற அழகுப் பொருட்களுக்கான விளம்பர வசதியோ, விற்பனைக்கான தளமோ ஏற்படுத்தப்படவில்லை. இவற்றை ஏற்படுத்தி பெருமளவில் அழகுப் பொருட்களை வடிவமைத்து தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். அது மட்டுமன்றி எமது பகுதிகளுக்கும் முழுமையாக கிடைக்கக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும்.

தனி ஒருவராக இதனை எனது வீட்டில் வைத்து செய்து வருகின்றேன். இளைஞர் - யுவதிகளை ஒன்றிணைத்து, அவர்களுக்குப் பயிற்றுவித்து அவர்களூடாக இந்தக் கலையை விஸ்தரிக்கவுள்ளேன். இதனூடாகக் கலையை இளைஞர்களிடம் ஒப்படைக்க முடியும்.

இன்றைய நவீன இலத்திரனியல் பொழுது போக்கு சாதனங்களின் அதீத பாவனையில் இளைஞர் - யுவதிகள் மூழ்கியுள்ளனர். அனேகர் வேலைவாய்ப்பின்றியுள்ளனர். வீணாக தமது இளமைக் காலத்தை கழிப்பவர்கள் முன்வந்து இந்த அழகுக்கலையை பயில வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் சுயமாக தொழில் செய்யக் கூடியவர்களாக மாறுவதுடன் சுயவேலை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்தக் கலையை மதித்து அதனை முழுமையாக பயில வேண்டுமென யார் வந்தாலும், அவர்களுக்கு கலை நுணுக்கங்களை பயிற்றுவிக்கத் தயாராகவுள்ளேன். இவ்வாறான அழகுக் கலைப் பொருட்களை மிகக் குறைந்த செலவில் செய்து விற்பனை செய்பவர்கள் ஒரு சிலரே. இந்தக் கலை வடிவம் என்னுடன் நின்று விடக்கூடாது தொடர வேண்டும் இதற்கு இன்றைய இளம் சமூகம் தான் முன்வர வேண்டும் என்றார்.

# பூகம்பம் ஏற்படுவதற்கான அறிகுறிகளை ஒருவாரத்திற்கு முன்பே அறியமுடிந்ததாம்!

## புவியியல் நிபுணர் தெரிவிப்பு

கான்பூர்—

ஒருவாரத்திற்கு முன்பே பூகம்பம் நிகழப் போவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அண்மைய பூகம்பத்தை ஆய்வு செய்து பார்த்ததில், இனி பூகம்பம் நடக்கப்போவதை முன்கூட்டியே அறிய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என புவியியல் நிபுணர் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் முசாபராபாத் நகர் அருகே ஏற்பட்ட கடும் பூகம்பம் காஷ்மீரின் பல பகுதிகளையும், பாகிஸ்தானையும் பேரழிவுக் குள்ளாக்கியது. ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பலிகொண்டதுடன், எண்ணற்ற வீடுகள், கட்டடங்களையும் தரைமட்டமாக்கிவிட்டது.

இந்நிலையில், இந்தப் பூகம்பம் குறித்து கான்பூர் ஐ.ஐ.டி, யில் உள்ள சிவில் பொறியியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட புவியியல் ஆராய்ச்சி நிபுணர் ஆர்.பி. சிங் தெரிவித்துள்ளதாவது -

கான்பூர் ஐ.ஐ.டி, அமெரிக்காவின் ஜோர்ஜ் மேசான் பல்கலைக்கழகம் மற்றும் நாசா அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு சார்பில் பூமியில் நிகழும் மாற்றங்கள் குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டன. இந்த ஆய்வு பூகம்பம் நிகழ்ந்த கடந்த 8 ஆம் திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக நடத்தப்பட்டது.

அப்போது பூமிக்குள் இருக்கும் வெப்பத்தின் அளவு, மேற்பரப்பில் காணப்படும் தட்ப வெப்ப நிலை, நீர் ஆவியாதல் மற்றும் காற்றின் ஈரப்பதன் ஆகியவை இயல்புக்கு மாறாக இருந்தது ஆய்வின்போது தெரியவந்தது. இதேபோல்தான் குஜராத் பூகம்பம் நிகழ்ந்த சில நாட்களுக்கு முன்னும் பூமியின் இயல்பான தன்மையில் மாற்றம் தெரிந்தது. இதுவரை 800 பூகம்பங்களை ஆய்வு செய்துள்ளோம். அவற்றில் 150 பூகம்பங்களில், பூகம்பம் நிகழ்வதற்கு ஒரு சில நாட்களோ அல்லது ஒரு வாரத்திற்கு முன்போ பூமியின் வெப்பம், மேற்பரப்பில் நிலவும் தட்பவெப்பநிலை, நீர் ஆவியாதல் ஆகியவற்றில் இயல்புக்கு மாறான ஒழுங் கற்றதன்மை காணப்பட்டதை அறியமுடிந்தது.

ரஷ்யா, இத்தாலி, ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளைக் கொண்டு பூகம்பத்தை முன்கூட்டியே அறிவிப்பதற்குண்டான வேலையில் ஈடுபட்டுள்ளோம். அதற்காக மேலும் பல தகவல்களை சேகரித்து வருகிறோம். பூகம்பங்களை அறிய, பூமியின் தன்மையை ஆராய சர்வதேச அளவிலான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மையம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் பூகம்பம் வருவதை விஞ்ஞானிகள் முன்கூட்டியே கணிக்க முடியும். பூமியில் பல்வேறு பாகங்களில் ஏற்படும் பூகம்பங்களின் தன்மை இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. வெவ்வேறு காலநிலைகளில், மாதங்களில், இடங்களில் பூகம்பம் ஏற்படுவதைப் பொறுத்து தட்ப வெப்ப நிலையிலும் மாறுதல் ஏற்படுகிறது.

கடந்த 8 ஆம் திகதி நிகழ்ந்த பூகம்பத்தை ஆய்வு செய்து பார்த்ததில், பூகம்பம் வருவதை முன்கூட்டியே அறியும் வகையில் தகவல்களைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## துருக்கியில் நிலநடுக்கம்

அங்காரா—

துருக்கியில் கடந்த சில ஆண்டுகளாக அவ்வப்போது பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. கடந்த 1999 ஆம் ஆண்டு அங்கு 2 தடவை ஏற்பட்ட பூகம்பத்தில் 18 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அங்குள்ள இஸ்மிர் நகரிலும் அதையடுத்துள்ள ஏஜியான் கடற்கரை பகுதிகளிலும் நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் ஒரு சில கட்டடங்கள் லேசாக சேதம் அடைந்தன. மக்கள் பீதியில் வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். நீண்ட நேரம் கழித்தே மக்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

இந்த நிலநடுக்கம் ஏற்பட்டு 4 மணி நேரம் கழித்து மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. முதலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை விட இது அதிசக்தி வாய்ந்ததாக இருந்தது. 5.9 ரிக்டர் அளவில் இது பதிவானது. இதனால் வீடுகள் கட்டடங்கள் குலுங்கின.

ஏற்கனவே பீதியில் இருந்த பொதுமக்கள் அலறி அடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள்.

இன்னும் சிலர் உயிர் தப்புவதற்காக மாடியில் இருந்து கீழே குதித்தனர். இப்படி குதித்தவர்களில் 6 பேர் படுகாயமடைந்தனர்.

கை, கால்கள் முறிந்த நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இஸ்மிர் நகர மக்கள் தற்போது வீதியில் தான் தங்கி உள்ளனர்.




### இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட

## காஷ்மீர் மாநில கல்வி அமைச்சர் கிளர்ச்சிவாதிகளால் சுட்டுக்கொலை!



புதுடெல்கி—

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மாநில கல்வி அமைச்சர் உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலில் மாநில கல்வி அமைச்சரான குலாம் நபி லோன் மற்றும், ஒரு கிளர்ச்சிவாதி, ஒரு பொலிஸார் மற்றும் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் உட்பட நால்வரே கொல்லப்பட்டவர்களாவர்.

தலைநகர் ஸ்ரீநகரிலுள்ள அமைச்சரின் வீட்டு மதில் மேலால் ஏறி உள்நுழைந்த இரண்டு கிளர்ச்சிவாதிகள் அமைச்சர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும், இதனால் காயமடைந்த அமைச்சரை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் அவர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலையடுத்து கிளர்ச்சிவாதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கிளர்ச்சிவாதி ஒருவரும், மெய்ப்பாதுகாவலர் மற்றும் பொலிஸாரும் உயிரிழந்தனர்.

இந்தத்தாக்குதலைத் தாமே நடத்தியதாக அல் மன்சூரியன் என்ற அமைப்பு ஸ்ரீநகரிலுள்ள பி.பி.சி அலுவலகத்திற்குத் தெரிவித்துள்ளது.

## பீகார் மாநிலத்தில் 2ஆவது முறையாக நேற்று சட்டசபைக்கான வாக்கெடுப்பு!

பாட்னா—

பீகார் மாநிலம் இந்த ஆண்டில் 2ஆவது முறையாக சட்டசபைத் தேர்தலைச் சந்திக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதம் நடந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் சட்டசபை கூட்டப்படாமலேயே மார்ச் மாதம் 7ம் திகதி ஜனாதிபதி ஆட்சி அமுல் படுத்தப்பட்டது.

இப்போது மீண்டும் சட்டசபை தேர்தலைச் சந்திக்கிறது. மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் 4 கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதில் முதல் கட்ட வாக்குப் பதிவு 57 தொகுதிகளுக்கு நேற்று நடைபெற்றது. பலத்த பாதுகாப்புடன் நேற்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

வாக்குப் பதிவு நடைபெற்ற தொகுதிகளில் 12 மாவட்டங்கள் நக்சலைட் தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்தது ஆகும். இங்கு 13,338 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. தேர்தலைப் புறக்கணிக்குமாறு கிராம மக்களுக்கு நக்சலைட்டுகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். மீறி வாக்களிக்கச் சென்றால் சுட்டுக் கொல்வோம் என்றும் மிரட்டல் விடுத்திருந்தனர்.

இதனால் நேற்று வாக்குபதிவு நடைபெறும் 57 தொகுதிகளில் மட்டும் 90 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். வாக்குச் சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய துணை இராணுவப் படையினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.



நக்சலைட்டுகள் நடமாட்டம் குறித்து விமானப்படை ஹெலிகொப்டர்கள் வானில் வட்டமிட்டு பறந்தவாறு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டன.

வன்முறையில் ஈடுபடுவோரைக் கண்டதும் சுட பொலிஸுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. நக்சலைட் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்து இருந்த கிராமங்களிலும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

என்றாலும் நவடாப மாவட்டத்தில் வாக்களிக்க வந்த வாக்காளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

57 தொகுதிகளில் காங்கிரஸ் - ராஷ்டிரிய ஜனதா தளம் கூட்டணியில் ராஷ்டிரிய ஜனதா தளம் 49 தொகுதியிலும், காங்கிரஸ் 7 தொகுதியிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும் போட்டியிடுகிறது.

## இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் சென்ற பயணிகள் பஸ் பூகம்பத்தில் சிக்கியதா?

### தேடுதல் தீவிரம்

சிறிநகர்—

சிறிநகரில் இருந்து முசபராபாத்துக்கு பஸ்சில் சென்ற 48 இந்திய பயணிகளைக் காணவில்லை. அவர்கள் பூகம்பத்துக்கு பலியாகி இருக்கலாமென அஞ்சப்படுகிறது.

ஜம்மு கஷ்மீர் தலைநகரமான சிறிநகருக்கும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் தலைநகரான முசபராபாத்துக்கு மிடையே தற்போது காரவான்-இ-அமன் (அமைதிப் பயணம்) என்ற பெயரில் பஸ் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

கடந்த 6ஆம் திகதி சிறிநகரில் இருந்து 66 இந்திய பயணிகளுடன் முசபராபாத் நோக்கி பஸ்புறப்பட்டுச்சென்ற இரண்டு நாட்களுக்குப் பின் காஷ்மீரில் பூகம்பம் ஏற்பட்டது.


பஸ்சில் சென்ற இந்தியப் பயணிகளில் 5 சீக்கியர்களும். 3 இந்துக்களும் அடங்குவர். அவர்களில் 5 சீக்கியர்கள் வாகா சோதனை சாவடியூடாக இந்தியாவுக்குத் திரும்பி விட்டனர்.

இந்த நிலையில் முசபராபாத்துக்குச் சென்ற பஸ் பயணிகளில் 48 பேரின் கதி என்ன ஆனது என்பது இன்னும் மர்மாக உள்ளது. பூகம்பம் ஏற்பட்டு 10 நாட்கள் ஆகிவிட்ட பிறகும் இவர்களைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்காததால் பூகம்பத்துக்கு இவர்கள் பலியாகி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்திய பஸ் பயணிகள் 48 பேரையும் தேடிக்கண்டுபிடிக்கும் பணியில் இந்திய அரசும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன.

அதுபோல, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து 41 பயணிகள் ஜம்மு காஷ்மீருக்கு பஸ்சில் வந்திருந்தனர். அவர்களில் 8 பேர் வாகா சோதனைச் சாவடி வழியாக பாகிஸ்தானுக்கு பாதுகாப்பாக அனுப்பப்பட்டு விட்டனர். மற்றவர்கள் சிறிநகரில் பாதுகாப்பாக தங்கியுள்ளனர். அவர்களை முசபராபாத்துக்கு அனுப்பி வைக்க இந்திய அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

## சதாம் மீதான வழக்கு இன்று விசாரணைக்கு!



பாக்தாத்—

ஈராக்கில் 143 ஷியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சதாம் மீது தொடரப்பட்டுள்ள வழக்கின் விசாரணை இன்று நடைபெறவுள்ளது. இந்த வழக்கில் ஈராக் முன்னாள் துணைப் பிரத மர் தாரிக் அஜீஸ் சதாமுக்கு எதிராக மாறியுள்ள தால் சதாமிற்கு மரண தண்டனை கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்த பின்னர் தப்பியோடிய சதாம் அமெரிக்க ராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். தற்போது அவரும் அவரது கூட்டாளிகளும் கைதிகளாக சிறையில் உள்ளனர். இதையடுத்து சதாம் மீது பல்வேறு கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

சதாம் கடந்த 1982 இல் தனக்கு எதிராக நடந்த கொலை முயற்சிக்கு பழிவாங்கும் விதமாக 143 ஷியா பிரிவு முஸ்லிம்களை கொல்ல உத்தரவிட்ட வழக்கும் இதில் அடங்கும். இந்த வழக்கு இன்று பாக்தாத் நீதிமன்றில் விசாரணைக்கு வருகிறது. இந்நிலையில் சதாமுக்கு நம்பிக்கையானவரும் அவரது ஆட்சியில் துணைப் பிரதமராக இருந்தவருமான தாரிக் அஜீஸ் - சதாமுக்கு எதிராக சாட்சியம் அளிக்க உள்ளார். இதனால் வழக்கில் சதாமுக்கு மரணதண்டனைகிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### விமான ஓட்டிகள் இல்லாத ஹெலிகளை

## மீட்பு பணிகளுக்கு அனுப்பி உதவுமாறு இந்தியாவிடம் பாகிஸ்தான் கோரிக்கை!

இஸ்லாமாபாத்—

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்கு ஹெலிகொப்டர்களை மட்டும் அனுப்புங்கள். அந்த ஹெலிகொப்டர்களை செலுத்துவதற்கு விமான ஓட்டிகள் தேவையில்லையென பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இதை ஏற்க இந்தியா மறுத்து விட்டது.

பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள முசபராபாத் உட்பட பல்வேறு நகரங்களில் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானது.

40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதில் பலியானார்கள். 2 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்து தற்காலிக முகாம்களிலும், வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். முகாம்களில் தங்கி உள்ளவர்களுக்கு நிவாரணப்பொருட்கள் போய்ச்சேர முடியாத அளவுக்கு அவை சேதமடைந்துள்ளன.

மீட்பு, நிவாரணப் பணிகளுக்கு பல்வேறு நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவ முன்வந்துள்ளன. இந்தியாவும் உதவிப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது.

மீட்பு நிவாரணப் பணிகளுக்கு இந்திய இராணுவத்தை சேர்ந்த ஹெலிகொப்டர்களையும், இராணுவ வீரர்களையும் அனுப்பி வைக்க தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்தது. ஆனால் இந்த உதவியை ஏற்க பாகிஸ்தான் மறுத்து விட்டது. இந்திய இராணுவத்தினரோடு இந்திய ஹெலிகொப்டர்களை எங்கள் பகுதிக்கு வர அனுமதிக்க மாட்டோம் என்றும் பாகிஸ்தான் அறிவித்தது.

ஆனால், இப்போது பாகிஸ்தான் திடீரென தனது நிலையை மாற்றிக்கொண்டுள்ளது. மீட்பு நிவாரண பணிகளுக்கான ஹெலிகொப்டர்களை மட்டும் அனுப்பி வையுங்கள் அவற்றுக்கு விமான ஓட்டிகள் வேண்டாம் இராணுவத்தினரையும் அனுப்ப வேண்டாம். நாங்களே அந்த ஹெலி கொப்டர்களை ஓட்டுவோம் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஆனால் பாகிஸ்தானின் இந்த யோசனையை இந்தியா ஏற்கவில்லை

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

*The Leading Daily of Tamils' Homeland*

# கொத்தணி வாக்குச்சாவடிகளில் கெடுபிடிகளின்றி வாக்களிக்கலாம்!

## மட்டக்களப்பு படையினர் உத்தரவாதம்

மட்டக்களப்பு —

ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் எந்தவித கெடுபிடிகளுமின்றி இராணுவச் சோதனைச்சாவடிகள் ஊடாகச் சென்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கொத்தணி வாக்குச்சாவடிகளில் வாக்களிக்க முடியுமென்று இராணுவத் தரப்பினரால் நேற்று உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 4 இராணுவப் படைப்பிரிவுகளின் கட்டளை அதிகாரிகளுடன் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரான மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.புண்ணியமூர்த்தி- மாவட்டச் செயலகத்தில் நேற்று இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் இராணுவத்தின் உத்தரவாதம் எழுத்து மூலமாக கைச்சாத்திடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர் வரும் தேர்தலில் 3 லட்சத்து 18 ஆயிரத்து 728 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதற்கென 354 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த வாக்காளர்களில் 25.4 வீதமானோர் (80 ஆயிரத்து 443) விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

இவர்களுக்குரிய 89 வாக்களிப்பு நிலையங்களும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 12 இடங்களில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களாக கடந்த பொதுத் தேர்தலைப் போன்று அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆராய நேற்று மாவட்ட செயலகத்தில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் செ. புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் பொலிஸ், இராணுவம் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து கொத்தணி வாக்குச்சாவடிகளில் வாக்களிக்கும் வாக்காளர்களை பொதிகள் இன்றி வருமாறு வேண்டுகோள் விடுத்தல்.

வாக்காளர்கள் பயன்படுத்தும் வாகனங்களை கொத்தணி வாக்குச் சாவடிகளிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் நிறுத்துதல்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களான சின்னவத்தை மற்றும் கமுனுபுர ஆகிய இடங்களுக்கு வாக்குப்பெட்டிகளை எடுத்துச் செல்லவும், எடுத்துவரவும் விமானப்படையினரின் ஹெலிகொப்டர் உதவியை நாடுதல்.

வாக்களிப்பு நிலையத்தில் வழமையான பாதுகாப்புடன் மேலதிகமாக இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளுதல் என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# கப்பலை விடுவிக்கும் முயற்சி தோல்வி!

கொழும்பு —

சோமாலிய ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்ட எச்.வி.டொக்கலோச் கப்பலையும் அதன் கப்டனான இலங்கையரையும் விடுவிக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மொகாட்டு கப்பல் நிறுவனமும் ஐக்கிய நாடுகள் சபையும் இதுவரை மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

சோமாலியக் கடற்பரப்பில் கடந்த 12 ஆம் திகதி சோமாலிய ஆயுதக் குழுவினரால் கடத்தப்பட்ட இந்த கப்பலின் கப்டனான ஏ.எச்.ஈ.டிசில்வா காலி தங்கெதரவைச் சேர்ந்தவராவார்.

கடத்தப்பட்ட கப்பலில் 9 கென்ய நாட்டு பணியாளர்களும் உள்ளனர். கடந்த ஜூன் மாதமும் சோமாலிய கடற்பரப்பில் கப்பலொன்று கடத்தப்பட்டது. அந்தக் கப்பலின் கப்டனும் இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் கடத்தப்பட்ட அந்தக் கப்பல் கடந்த 14 ஆம் திகதி விடுவிக்கப்பட்டது.

# அமெரிக்க தடைச்சட்டத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

கொழும்பு

விடுதலைப் புலிகளின் சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவும், 2004 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் சேவையாற்றுவதற்கும் தடையாக இருக்கும் அமெரிக்காவின் 2001 ஆண்டின் சர்வதேச அவசரகால பொருளாதார சட்டத்திற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அமெரிக்காவின் மீது 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலின் பின் கடந்த ஆண்டு அமெரிக்க அதிபர் புஷ் இந்த அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தினார்.

அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட பல்வேறு அமைப்புகளுடன் ஓகாலனின் குர்திஷ் விடுதலை அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பொருளுதவி மற்றும் சேவைகளை வழங்குவதையும் இந்தச் சட்டம் தடைசெய்தது.

இத்தகைய சட்டத்தால் எந்தவொரு அமைப்பினது சட்டபூர்வ, மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவி செய்யும் அமெரிக்க குடிமக்கள் பாதிக்கப்படுவதாக ஆட்சேபனைகள் எழுந்தன.

இந்த நிலையில், அமெரிக்காவில் உள்ள மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் அமெரிக்க தமிழ் அமைப்புக்கள் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கவும், புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் சேவையாற்றவும் தடையாக இருக்கும் இந்த 2001 ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர்.

சட்டபூர்வ உரிமைகளுக்கான மையத்தினரால் இந்த வழக்கு தொடரப்படவுள்ளது.

மற்றொரு அமெரிக்க தேசாபிமான சட்டமானது ஓகாலனின் குர்திஸ்தான் விடுதலை அமைப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பயிற்சியளித்தல், ஆலோசனை வழங்குதல் மற்றும் சேவையாற்றுதலை தடைசெய்வதை சட்டபூர்வமற்றது என்று கடந்த ஜூலை மாதம் அமெரிக்க நீதிபதி ஒட்றி கொலின்ஸ் அறிவித்திருந்தார்.

## நிமால் நினைவுதினம் இன்று

யாழ்ப்பாணம் —

தேசவிரோதிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மயில்வாகனம் நிமலராஜனின் 5 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று பி.ப. 5 மணிக்கு யாழ். ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு மற்றும் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டுடன் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பினார்!

கொழும்பு —

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் அவர் கட்டுநாயக்கவை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது மகனின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளச் சென்ற ஜனாதிபதி - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டின் பின்னரே நாடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தல்...

சந்திரிகாவோ பங்கேற்வில்லை.

ஜனாதிபதி சந்திரிகா தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டனுக்கு சென்றிருந்த நிலையிலும் வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கொழும்பில் தங்கியிருந்தபோதிலும் நேற்று நடைபெற்ற தேர்தல் அறிக்கை வெளியீட்டு நிகழ்வில் அவர்கள் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர்கள் மற்றும் பிக்குகளே அதிகளவில் இருந்தனர்.

ஜே.வி.பி, ஹெல உறுமய, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, ஈ.பி.டி.பி, தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### பொலிஸ்...

கே.குணபாலசிங்கம் என களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை நேரில்கண்ட சாட்சிகள் இல்லாத காரணத்தால் இது பற்றிய மேலதிக தகவல்களை தங்களால் பெறமுடியாதிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### போராளிகளின்...

நாகையா முருகமூர்த்தியை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர். இவரது மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது.

மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம். எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் நேற்று மாலை அரபாத் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி - அன்றையதினம் அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

### ஹலோ...

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் வாகனத்தரிப்பிடத்தில் மிதிவெடியகற்றும் பணியாளர்களின் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்தின் சில்லின் கீழ் மேற்படி கண்ணிவெடி புதைக்கப்பட்ட நிலையில் இருந்தது.

நேற்றுமுன்தினம் காலை மேற்படி வாகனத்தை சாரதி எடுக்க முற்பட்ட போது சில்லின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியைக் கண்டதுடன் அந்தக் கண்ணிவெடி மிதிவெடி அகற்றும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. உள்முரண்பாடு காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### ஜனாதிபதி...

சிங்கள சேவையான சந்தேசியவுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இலங்கை அரசாங்கதுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் எவர் தெரிவுசெய்யப்பட்டாலும் சமாதான முயற்சிகளில் ஒரு தீவிரத் தன்மை இருக்கும்.

இலங்கையின் சாதான முயற்சிகளில் நான் நேரடியாக கலந்துகொள்வேனென நிச்சயமாக எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய பாடசாலைகளில் பணியாற்றும்

# தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை!

கொழும்பு

தேசிய பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாகப் பணியாற்றி இதுவரை நிரந்தரநியமனம் கிடைக்காதவர்களுக்கு நேர்முகப்பரீட்சையை நடத்தி அவற்றின் விபரத்தை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனருக்கு நேற்று அறிவித்தார்.

மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக பணிபுரிந்த வர்களுக்கு நிரந்தர நியமனம் பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு விட்டன. தேசிய பாடசாலைகளில் பணியாற்றிய தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனர் உட்பட பல்வேறு தரப்பினருடனும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த.மகாசிவம் பேச்சுக்களை நடத்திய போதிலும் எவ்விதமுடிவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் த.மகாசிவம் கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டிமெல்லுடன் இது தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.

இதற்கமைய தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வை உடனடியாக நடத்தி அதன் விபரங்களை தனக்கு அனுப்பி வைக்குமாறு கலாநிதி தாராடிமெல் வடக்கு- கிழக்கு மாகாண ஆளுனருக்கு நேற்று அறிவித்துள்ளார்.

இதனையடுத்து தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டராசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு விரைவில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

(10)

# போர்நிறுத்த உடன்...

அவர் அங்கு மேலும் பேசுகையில் -

நான்கு சவால்களுக்கு நான் முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அதில் முதலாவது விடயம் சமாதானமாகும். ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து மக்களும் கௌரவத்துடன் வாழக்கூடிய சமாதானத்தை நான் உருவாக்கவுள்ளேன். போராட்டம் நடத்துபவர்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் திட்டமிட்டுள்ளேன்.

யுத்தத்துக்கு வழிவகுக்காத வகையில் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும். விடுதலைப் புலிகள் முன் வைத்த தன்னாட்சி நிர்வாக அதிகார சபையை ஏற்கமுடியாது. நோர்வே அனுசரணையுடன் 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் முற்றாக மாற்றியமைக்கப்படும். ஐரோப்பிய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகளும் மீளாய்வு செய்யப்படும்.

இன்று வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல், கலாசாரம் இவற்றைப் பேணுதல் மற்றும் இளம் தலைமுறைக்கு நம்பிக்கை மிக்க எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுத்தல் ஆகியன என் முன் இருக்கும் இதர சவால்கள் எனத் தெரிவித்தார்.

மதத் தலைவர்கள், அரசியல் கட்சித் பிரமுகர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### போர்நிறுத்த...

கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது போர் நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டியதன் அவசியத்தன்மை குறித்து ஜயந்த தனபால வலியுறுத்தினார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மற்றும் பலர் சமர்ப்பித்த ஆலோசனைகள் குறித்தும் போர்நிறுத்த உடன்படிக்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் மற்றும் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் புதிய நோர்வே அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக ஜயந்த தனபாலவை சந்தித்த பின்னர் புறூவ் ஹொவ்டே தெரிவித்துள்ளார். (தே)

# நாடு முழுவதும்...

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றில் உறுதியளித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் மசோதாவை நாடாளுமன்றில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுத் தாக்கல் செய்தார்.

இந்த மசோதா மீது பேசிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க நவம்பர் 13 ஆம் திகதிக்குப் பின் குறிப்பிடும் வகையான வன்முறை மற்றும் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்படாது என்று தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நவம்பர் 13 ஆம் திகதிக்குப் பின்னர் எந்தச் சூழலிலும் நீடிக்கக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொறடா மகிந்த சமரசிங்க வலியுறுத்தினார். இந்த நிபந்தனையின் அடிப்படையில்தான் தமது கட்சி தற்போதைய அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்றும் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.